மங்கங்கள் எட்டு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்



ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கப்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/50

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கப்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஹூ மீ ஆவணி 02 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 15 (18 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 220

# பிரேமாவின் தூதர் பிரட்மன்

# பிரதமர் ராஜீவுடன் பேச்சு

## புதிய பெறுபேறுகள் தெரியவரும்

புதுடில்லி, ஆகஸ்ட் 18

இலங்கை ஜனாதிபதி திரு. ஆர், பிரேமதாஸாவின் சிறப்புத் தூதர் பிரட்மன் வீரக்கோன் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உட்பட ஏனைய தலைவர்களுடன் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

புதுடில்லியில் அவர் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து விரைவில் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாத ஆரம்பத்தில் புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை - இந்திய பேச்சுக்களின்போது தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் குறித்து, இந்தியத் தரப்பிடம் மேலதிக விளக்கம் கோருவதற்காக, தூதுவர் பிரட்மன் வீரக்கோன் புதுடில்லி செல்வார் என செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஊவா முதலமைச்சர் தாக்குதலில் காயம்

### வீட்டின் மீது குண்டு வீச்சு

கொழும்பு, ஆகஸ்ட் 18

ஊவா மாகாண முதலமைச்சர் பேர்ஸி சமரவீராவின் வெலிமடை வாசஸ்தலத்தின் மீது இனந்தெரியாதவர்கள் கோஷ்டி ஒன்று நேற்றுக் காலை திடீர்த் தாக்குதலை நடத்தியது.

அதில் முதலமைச்சர் பேர்ஸி சமரவீராவும் மற்றும் நால்வரும் காயமடைந்தனர்.

இனந்தெரியாதவர்கள் கைக்குண்டுகளை வீசியும் தானியங்கித் துப்பாக்கிகளால் சுட்டும் தாக்குதலை நடத்தினர்.

திரு. சமரவீரா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ-எ-க-21)

## பிரேமா - பிக்குமார் பேச்சு சாதகமாக இல்லையாம்!

கொழும்பு, ஆக. 18

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் பௌத்த பிக்குகளும் சேர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடத்தியபேச்சுக்கள் சாதகமானதாக அமையவில்லை.

வெளிநாட்டு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின இதனை நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

திரு. தினேஷ் குணவர்த்தனவுடன் திரு. பிரின்ஸ்குணசேகரா, வண. மடுவசோபித தேரர், வண முருத்தெட்டுவ ஆனந்த தேரர் ஆகியோர் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

பேச்சுக்களில் இடம்பெற்ற விவரங்களைப்பகிரங்கப்படுத்துவது இல்லை என்று இருதரப்பினரும் இணக்கம் கண்டனர் என்றும் திரு. ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்.

## பொற்பதியில் தேடுதல்; படமும் பிடிக்கப்பட்டது!

கொக்குவில், ஆக 18

கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

புனித சின்னப்பர் ஆலயத்தைச் சூழவுள்ள மக்களை ஆலயத்தில் கூடும்படி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆலயத்தின் முன் மக்கள் கூடினர். ஆண்கள் 'தலையாட்டி' முன் அணிவகுத்துச் சென்றனர். இவை அனைத்தும் 'வீடியோ' படம் பிடிக்கப்பட்டன.

இராணுவ உயர் அதிகாரிகளும், பெண் பொலிஸாரும், தொண்டர் படையினரும் கூட அப் பகுதியில் கூடி இருந்தனர். (ஓ-69)

## வவுனியா மடுக்கந்தையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் சூட்டுக்கு இளைஞன் பலி!

வவுனியா, அக் 18

செவ்வாயன்று வவுனியா மடுக்கந்தை என்னுமிடத்தில் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இளைஞர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளாகினர்.

இவரிடமிருந்து கிரனேட் ஒன்றைக் கைப்பற்றிய படையினர் இவரை வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

மடுக்கந்தைப் பகுதியைச் சேர்ந்த ஜயசிங்க (வயது 30) என்ற அந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் மரணமானர்.

[ஓ-164]

## இராணுவத்தில் இருந்து செல்வோர் தீவிரவாதிகளே!

### அமைச்சர் ரஞ்சன் சொல்கிறர்

கொழும்பு ஆகஸ்ட் 18

இலங்கை இராணுவத்தில் இருந்து இப்போது சொல்லிக் கொள்ளாமல் வெளியேறுபவர்கள் யார்?

இக்கேள்விக்கு வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின பதிலளித்திருக்கிறர்.

அவர் சொன்னதாவது;

இராணுவத்தில் இருந்து அறிவிக்காமல் வெளியேறுபவர்கள் மிகச் சொற்பமே. அப்படி ஏற்கனவே வெளியேறியவர்கள் தீவிரவாதிகளே.

வடக்கு- கிழக்கில் இலங்கை இராணுவம் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் புதிதாக வீரர்கள் திரட்டப்பட்டனர். அச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி படையினுள் தீவிரவாதிகள் ஊடுருவல் நடத்தினர்.

அப்படிச் சேர்ந்து இராணுவப் பயிற்சி பெற்ற அவர்கள் தான் இப்போது திடீரென்று விலகிச் சென்று கொண்டிருக்கிறர்கள் என்று- அமைச்சர் விஜேரத்தின சொன்னர். (ஓ-எ)

## நெல்லியடியில் நேற்று இரு அசம்பாவிதங்கள்

### ஷெல் தாக்குதலும் நிகழ்ந்தது

கரவெட்டி, ஆகஸ்ட் 18

நெல்லியடி, நாவலர் மடம் ஆகிய பகுதிகளில் நேற்று அசம்பாவிதங்கள் இடம்பெற்றன; இப்பகுதிகளில் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை 10 மணியளவில் நெல்லியடி கல்லூரி

(8ஆம் பக்கம் பார்க்க)

## மன்னரில் நடந்த தாக்குதல் 24 இந்திய ஜவான்கள் பலி!

கொழும்பு, ஆகஸ்ட் 18

மன்னார் நகரில் இடம்பெற்ற தாக்குதலில் 24 அமைதிப் படை ஜவான்கள் பலியாகினர்; 11 பேர் காயமுற்றனர்.

சிவில் மருத்துவமனையைச் சுற்றி காவல் பணியில் இருந்த அமைதிப்படை நிலைகள் மீது புதன் இரவு இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இந்தியத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

மருத்துவமனைக்குள் இருந்து அமைதிப்படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்றும் ரொக்கெட் மூலமாக கிரனேட்டுக்களையும் மோட்டார் ரக பீரங்கிகளையும் பயன்படுத்தி அமைதிப் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் அத் தகவலில் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவ மனைக்குள் 89 நோயாளர்கள் இருந்ததால் அமைதிப் படையினர் எதிர்த்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி வார்ட்டுகளிலிருந்து நோயாளர்கள் வெளியேறினர்

### தனியார் ஆஸ்பத்திரிகளும் முழு அளவில் ஸ்தம்பிதம்

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் ஏழாவது தினமாக நேற்றும் டாக்டர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆஸ்பத்திரிகளில் இருந்து பெரும்பாலும் முழு நோயாளிகளும் வெளியேறி விட்டனர் என்று கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மற்றும் சுற்றுப்புற அரசு மருத்துவமனைகளில் மரணவிசாரணை நடைபெறுமல் பல சடலங்கள் பிரேத அறைகளில் வைக்கப்பட்டிருந்தன.

இவற்றுள் அடையாளம் காணப்படாத முழுச் சடலங்களும் படையினரால் அங்கிருந்து அகற்றப்பட்டன.

மரணவிசாரணை நடத்தும் சட்ட வைத்திய அதிகாரிகளும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதே சமயம் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகளுக்கும் இனந்தெரியாதவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்றும் இதனைத் தொடர்ந்து அவைகளும் நேற்று மூடப்பட்டுவிட்டன என்றும் ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ-21)

## முச்சந்தி முரளி



ஆஸ்பத்திரிக்கு ஆள் வைச்சுக் கூப்பிட்டாலும் இனி நோயாளர் வரமாட்டினமோ பிள்ளை......!

### சுபநேரம்

[18 - 8 - 1989]

சுபநேரம்:
06-05 முதல் 07-35 வரை
ராகுகாலம்:
10-35 முதல் 12-05 வரை

## காங்கேசன் கூட்டுத்தாபன சிமெந்து விநியோகம் நேற்றுடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக.18

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினல் மேற்கொள்ளப்பட்டுவந்த சிமெந்து விநியோகம் நேற்றுவியாழக்கிழமையுடன் நிறுத்தப்பட்டது. இன்று தொடக்கம் மறு அறிவித்தல்வரை சிமெந்து விநியோகம் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டது.

மின்சாரவிநியோகம்தடைப்படுவதற்கு முன் உற்பத்தியாகிக் கையிருப்பில் இருந்த பதினையாயிரம் தொன் சிமெந்தும் பைக்கெட் செய்யப்பட்டு கடந்த சுமார் ஒரு மாதமாக விநியோகிக்கப்பட்டு வந்தது.

அந்தக் கையிருப்பு நேற்றுடன் முடிவடைந்ததால் இனி மின்சார விநியோகம் கிடைத்தபின்னரே புதிதாகச் சிமெந்தை உற்பத்தி செய்ய முடியுமென சிமெந்துக் கூட்டுத்தாபன வட்டாரங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 13 சடலங்கள் படையினரால் மீட்கப்பட்டன

கொழும்பு, ஆக, 18

கடுவல பகுதியில் எட்டுப் பேரின்சடலங்களும் கண்டிக்கு அருகே ஐந்துபேரின் சடலங்களும் நேற்று பாதுகாப்புப் படையினரால் கண்டெடுக்கப்பட்டன.

இவர்கள் தீவிரவாத இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ஓ-எ)

## செய்திச் சாரம்

### கந்தர்மடம் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 18

யாழ் - கந்தர்மடம் பகுதி நேற்று பிற்பகலில் சுற்றிவளைக்கப்பட்டது.

தீவிர தேடுதல்களும் மேற்கொள்ளப்பட்டதுடன்,. பல இளைஞர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-9)

### கொட்டடியில் இளைஞன் பலி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 18

கொட்டடியில் நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நடராசா இராஜ ஸ்ரீதரன் (வயது 26) என்பவரே மரணமானவர் எனத் தெரிவிக்கப்பட்டது;

இவர் யாழ் பிறவுண் வீதியைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டது: (ஓ-10-51)

### இருபாலையிலும் இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 18

இருபாலைப் பகுதியிலும் நேற்று இளைஞர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்.

கொலையுண்டவர் இருபாலை அரசடி வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் ஜெயசீலன் (வயது 24) என்பவர் என அடையாளம் காணப்பட்டார்.

(ஓ-10-51)

### நவிண்டிலில் மீண்டும் முகாம்

கரவெட்டி, ஆக 18

நவிண்டிலில் மீண்டும் அமைதிப்படைமுகாம் அமைக்கப்பட்டது. அத்தோடு தேடுதலும் ஆரம்பித்தது.

நேற்று நாவலர் மடம், நவிண்டில் பகுதிகள் சுற்றிச் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றன. அப்பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர். (ஓ-70)

### 48 மணி நேரத்தில் 48 பேர் கொலை

கொழும்பு, ஆக 18

கடந்த 48 மணி நேரத்தில் குறைந்தது 48பேர் தென் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-எ)

### முகமாலையில்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 18

முகமாலை பகுதியில் நேற்று பிற்பகலளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

சம்பவத்தை அடுத்து கண்டி வீதி ஊடாக வந்த வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன: (இ-9)

### முல்லைத்தீவு பட்டினத்தில் சுற்றிவளைப்புகள்

முல்லைத்தீவு ஆகஸ்ட் 18

முல்லைதீவுப் பட்டினப் பகுதியில், திடீர் திடீரெனப் படையினர் சுற்றி வளைப்புகளையும் தேடுதல்களையும் நடத்துகின்றனர்.

கடந்ததிங்கட்கிழமை இங்கு நடைபெற்ற சிரச்சேத சம்பவத்தின் பின்னர் சுற்றிவளைப்புகள் அதிகரித்துள்ளன.

இதேவேளை அன்றையதினம் கொய்யப்பட்ட இரண்டுதலைகளும் கள்ளப்பாடு என்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்டது.

இத்தகவல் அறிந்துமுல்லைத்தீவுப் பட்டின மக்கள் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பீதியுடன் காணப்படுகிறன்னர். (அ-92)

### ரயில்வே கடவை காரியம் முடிந்தது!

யாழ்ப்பாணம் ஆக 18

அப்பாடா! ஆகக் கடைசியாகவேனும், ஆகப் பிந்தியேனும், காரியம் முடிந்தது!!

வேறு எதுவும் பெரிதாக இல்லை. ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் உள்ள ரயில்வேக் கடவை வீதிப்பகுதி நேற்றுத் திருத்திச் செப்பனிடப்பட்டது.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், ரோலர்கள் சகிதம் ஒரே நாளில் வீதியை நேற்றுச் சீராக்கி

(8ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானக் கமிட்டியில் இவர்களும்?

கொழும்பு, ஆகஸ்ட் 18

புதுடில்லி யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட வடக்கு—கிழக்குக்கான உத்தேச சமாதானக் கமிட்டியை விஸ்தரித்து, ஐக்கிய தேசியக் கட்சி: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்ப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகிறது:

தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ்ப் போராளிகள் இயக்கங்களின் பிரதிநிதிகள் மட்டுமே இக்கமிட்டியில் அங்கம் வகிப்பர் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நாடாளுமன்றத்தில் கடந்த வெளிக்கிழமை தெரிவித்திருந்தார். (அ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

காவலூர் மக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! எம்மிடம் செபப்புத்தகங்கள், செபமாலை, செபமாலைத் தியானம், மோட்சம்பாலைத, மெழுகுதிரி, சத்தியவேத பாதுகாவலன், தோலகட்டி நெல்லிரசம், மடுத்திருப்பதி பூசை, திருப்பலி நாடாக்களும் பெற்றுக்கொள்ளலாம். புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோஸ், கரம்பொன், ஊர்காவற்றுறை. (1539)

கடை, அலுமாரி-2, மருந்துக்கடைக்கும், புடைவைக்கடைக்கும், பலசரக்குக் கடைக்கும் பாவிக்கலாம் இழ் லாச்சி உடையது: உயரம் 6அடி, நீளம் 5அடி, அகலம் 15அங்குலம், 6', 7', 8', 9', 4' 24 கேஸ் தகரம் 150ம், கதிரை செற்றி என்பனவும் விற்பனைக்கு உண்டு; சி: கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி, மானிப்பாய். (1541)

பன்டம் தாரா, வான்குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. எ: பா உமாபதி, மீனாட்சி அம்மன் வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி. [1620]

நல்லின யேர்சி நாம்பன் (18 மாதம்) காளை மாடாக பாவிக்க உகந்தது. தொடர்பு பழைய நம்பர் 142, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [1538]

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புரொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 – 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும். (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல: 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் லைட் அவசியமில்லை. (1606)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள் 17, 18 ஆந் திகதிகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன் கொக்குவில். (1610)

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புரொய்லர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்கும்எம்மை நாடுங்கள். ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802, பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

### சேவை

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு அண்மையில் பாதுகாப்பான சூழலில் பெண்களுக்கு உணவுடன் இருப்பிட வசதிகள் உண்டு. 576, C/o Uthayan. (1601)

### தவறிவிட்டது

திருமதி கிட்டினர் யோகம், மாவடி, வல்வெட்டி ஆகிய எனது அடையாள அட்டை 14. 08. 89 ஞாயிற்றுக்கிழமை 750 இலக்க தனியார் மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து வல்வெட்டி உப-தபால் அஞ்சலகத்தில் ஒப்படைக்கும் வண்ணம் தயவுடன் வேண்டுகின்றேன். (1540)

திருமதி நாகேஸ்வரிகிருஷ்ணசாமி இல. 348071491 V சென்பீற்றஸ் பிளேஸ்பம்பலப்பிட்டி என்ற விலாசம் உடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் பொற்பதி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1632)

### 'ஆசிரியர் பரீட்சை'

ஆசிரியர் பயிலுநர் போட்டிப்பரீட்சை வகுப்புக்கு பரீட்சை பிந்தியதால் புதியவர்கள் சேரலாம். கற்பித்த பாடங்களும், மிகக் குறைந்த கட்டணம் ரூபா 50/ மட்டுமே தினமும் மூன்று மணித்தியால வகுப்பு; அன்பு கல்வி நிறுவனம் மே/பா உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் [11733]

### நன்றி மன்றுட்டு

புனித ஜேர்மெயின் அம்மாள் இறைவனிடம் எமக்காகப் பரிந்து பேசி நாம் வேண்டிய வரங்களை தவறாது கிடைக்கப்பெற்றதினால் அவ‌ளின் நாமம் புகழப்படுவதாக அடியாள். (1542)

### வைத்தியம்

தொய்வு, பாரிசவாதம், குடற்புண், மலச்சிக்கல் நரம்புத் தளர்ச்சி, இது போன்ற நோய்களை யோக வைத்தியத்தின் மூலம் குணமாக்கி நோயற்று வாழ்வீர்களாக. தொடர்பு: V. S. சோமசுந்தரம்: 95/14, ஸ்டேசன்லேன், யாழ்ப்பாணம். (1618)


# 1970 க்குப் பின்பே பெண்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம்

## மகளிர் அபிவிருத்தி நிலையக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம் ஆக 18
இலங்கையில் 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னரே பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

உரும்பராய் மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மையில் ஒழுங்கு செய்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய திருமதி சரோஜா சிவச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் தொடர்ந்து நிலவும் இன்றைய குழப்பமான நிலையில் பெண்களின் நிலைமை என்னும் தலைப்பில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

திருமதி சரோஜா தொடர்ந்து பேசுகையில் எமது பிரதேசத்தினைப் பொறுத்து வருமானம் வழங்கும் நிலைகளில் எல்லாம் பெரும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன தெற்குடனான தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் குடாநாட்டுக்கு அப்பால் மகளிர் சென்று வேலை பார்க்கவோ, தொழில் வாய்ப்புகளைத் தேட முடியாத நிலை இன்று உருவாகியுள்ளது.

இதனால் படித்த பெண்கள் பட்டதாரிகள் உட்பட பலர் யாழ் குடாநாட்டுக்குள்ளேயே வேலை தேடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி பல தொழில் வழங்குபவர்கள் குறைந்த ஊழியத்தில் அவர்களை வேலைக்கு அமர்த்தி உள்ளனர்.

இவ்வாறு பெண்கள் சுரண்டப்படுவதற்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும்.

இவை மட்டுமன்றி இன்று ஆண்கள் ஒதுங்கி இருக்கும் ஓர் சூழ்நிலை உருவாகியுள்ளதினால் பெண்களுக்கு வழங்கப்பட்ட சுமைகள் இரட்டிப்பாகியுள்ளன.

இவை யாவும் கவனத்தில் கொண்டு செயற்படுதல் மகளிர் அமைப்புக்கு இன்றியமையாதது.

இப்படி அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி என். நித்தியானந்தன் யாழ். கல்வி அதிகாரி திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

வைத்திய கலாநிதி இந்திராஜா பெண்களின் வைத்திய முறைகளையும் முதலுதவி முறைகளையும் பற்றி ஆலோசனை வழங்கினார். (இ-10)

## நியமனம் கிடைக்கும்போது

# வாக்காளர் இடாப்பு பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம் ஆக. 18
25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர் பதவிக்கு நியமனம் பெறுவோர் தம் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்த வாக்காளர் இடாப்பின் பிரதி சமர்பிக்க வேண்டும்.

எதிர் வரும் 20ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கும் இப் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு வருவோர் குறிப்பிட்ட இடத்தில் மூன்றுண்டு காலம் நிரந்தரமாக வசித்தார் என்பதை அத்தாட்சிப்படுத்த வாக்காளர் இடாப்பின் பிரதி சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது இப்பிரதி கொண்டு வரத் தேவையில்லை என்றும் பின் நியமனத்துக்குத் தெரிவான பின் இப்பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கல்வித் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (3)

## வடமராட்சியில்

வடமராட்சியில் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்தால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாக புகார் செய்யப்படுகிறது.

## வடலியடைப்பில்

வடலியடைப்பு மக்கள் பலருக்கு மீளக் குடியமர்தலுக்கான நிதி உதவி இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (-120)


## நியூ - பொலி [தெல்லிப்பளை]

### O/L DAY CLASSES

2 ஆம் பிரிவு

ஆரம்பம்: 21-08-89 திங்கள் 8மணி

| | |
|---|---|
| கணிதம்:- | திரு: சதீஸ் |
| விஞ்ஞானம்:- | திரு. வசந் |
| சமூகவியல்:- | திரு. தவா |
| தமிழ்:- | திரு. தணிகாசலம் |
| ஆங்கிலம்:- | திரு: மரியதாஸ் |
| சமயம்:- | திரு. கிரி |
| வர்த்தகம்:- | திரு. சதீஸ், சத்தி |

[1630]

## நியூ - பொலி

[தெல்லிப்பளை]

### 91 A/L கலை, வர்த்தகம்

நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. லோகசிங்கம் |
| அளவையியல்:- | திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகவியல்:- | திரு. இரட்ணம் |
| கணக்கியல்:- | திரு. தேவதாஸ் |
| தமிழ்:- | திரு. தணிகாசலம் |
| இந்துநாகரிகம்:- | திரு. மதியழகன் |
| அரசியல்:- | திரு: செபராஜா |
| புவியியல்:- | திரு: ரேபேட் |

குறிப்பு:-
பொருளியல் ஆரம்பம்
21 - 08 - 89 4.30 p.m

[1629]

## VACANCY IN IDP

Interview will be held for the Post of Programming Demonstrators on 23 - 08 - 89 at 10 00 a.m.

Qualification
Fluent knowledge in English & Programming Experience in BASIC, D-BASE - III +, LOTUS 123 & Word perfect or word Star 2000 + Package Applications.

Contact:
Administrator,
**I D P Computer Centre**
342, K. K. S Road, JAFFNA.

★ Computer பயிற்சிகளுக்கான புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

[சி-3229]

## NEW BECON

(சித்திராலயா முன்பாக)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 90 - 91

புதிய பிரிவு

ஆரம்பம்: 19 - 08 - 1989
சனி 8. 00 மணி

| | |
|---|---|
| பொருளியல் — | வரதராஜன் |
| வர்த்தகம் — | தேவா |
| கணக்கியல் — | யோகராஜா |
| அளவையியல் — | S. S. மனோகரன் |
| இந்துநாகரிகம் — | திருமதி N. கிருஷ்ணவேணி |
| தமிழ் — | குழந்தை |

G.A.Q- B- A வகுப்புக்கள்

ஆரம்பம்: 02-09-1989
சனி 1.00 மணி

(சி/3231)

## A\L விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு

91 பிரிவு 11

ஆரம்பம்: 19-08-1989
சனிக்கிழமை 11. 30 மணி

| | |
|---|---|
| பௌதிகவியல் | — Mr. ரவீந்திரநாதன் B.Sc |
| இரசாயனவியல் | — Mr. நாகரட்ணம் B.Sc |
| விலங்கியல் | — Mr. தம்பிராஜா B.Sc |
| தாவரவியல் | — Mr. சிவவீரசிங்கம் B.Sc |
| தூய/பிரயோககணிதம் | — Mr. கணேசன் B.Sc |

3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[சி-3227]


## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



### பொன்னையா வசந்தகுமார்

[சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு விஞ்ஞான பிரிவு மாணவன்]

அன்னையின் மடியில்: 13 - 03 - 1968
ஆண்டவன் அடியில்: 20 - 06 - 1989

அன்பு மகன் நீ எனக்கு
இனிய அன்னை தந்தை நாங்கள் உனக்கு
மன்னவனே நீ மாண்ட விதம் எப்படியோ?
வசந்தன் என்ற இனிய நாமம் சூட்டி நின்றோம்;
வசந்தன் என்று அழைத்தவுடன்
இனிய புன்சிரிப்புடன் ஓடிவருவாயே!
வசந்தன் இன்று நீ எமமை இடியேற்க வைத்தாயோ?
சின்னஞ் சிறு வயதில் பண்புள்ள பாலனாய்
பள்ளிப படிப்பதனைப் பாங்காக முடிக்க முன்னே
வசந்தனே நீ சென்ற இடம் செப்பாயோ?
கலலு வைத்த கோயில் எல்லாம்
உன் அன்னை கை எடுத்துக் கும்பிட்டாளே
சிவதொண்டை நிறுத்த வேண்டாம் என்று
உன் கரத்தால் எழுதி வைத்தாயோ?
பெற்றோரை மறந்தாயோ
உடன் பிறப்பை மறந்தாயோ?
எங்களை விட்டோட ஏன் மனம் ஏவியது?
வாழ்ந்த மனை விட்டேகி பிறந்த மனை தனிலே
உற்றார் துணை இல்லை ஊரார் துணையின்றி
சிவலோகம் சேர்ந்தீரே!
வாடா மனோ வசந்தகுமாரா என்று
யாரை அழைப்போம் இனி?

வசந்தன் உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பத்தன் மோட்டை,
கண்டாவளை.
[1587]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### செல்வி இரஞ்சிதநிலா கணபதிப்பிள்ளை

மலர்ந்தது: 19 - 09 - 1957
உதிர்ந்தது: 20 - 07 - 1989

மணக்கோலம் பார்க்க என்று ஆவலுற்றோம்
பிணக்கோலம் எடுத்து எமைத் தடுத்திட்டாயே!
பூசை அறை மலராக இருக்கும் உன்னை
ஆசை நிறைவோடு பார்க்கும் போதிலெல்லாம்
கண்கலங்கிக் கதறுகிறோம் எங்கள் நெஞ்சின்
உள் கலங்கி உள்ளீரல் எரியுதம்மா!
உனது அன்பு வார்த்தையிலே நேர்மையிலே
உனக்கு ஒப்பு எங்களுக்குள் இல்லையம்மா!

29. 07. 89 இல் நடைபெற்ற ஈமக் கிரியைகளில் பங்கு கொண்டு ஆறுதல்கள் அளித்தவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், நன்றி தெரிவிப்பதுடன் 19. 08. 89 இல் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்:
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெருமக்கள், மருமக்கள்.

47, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(1544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

ஊறுள!
நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவர் நாண்ஆள் பவர்.

பொருள்!
நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொள்பவர், நாணத்தால் உயிரை விடுவர்! உயிரைக் காக்கும் பொருட்டாக நாணத்தை விடமாட்டார்.

உதயன்

இல 292/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24800, 23073

18 - 08 1989

## வழிமாற்றமும் சமாந்தரமும்

தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்கள் அடுத்த வருடமே திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு நிலவும் நெருக்கடி நிலைமை காரணமாக பல்கலைக்கழகங்கள் இப்போது உயர் கல்வி அமைச்சின் கையில் இல்லை! பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பிலேயே உள்ளன!!

பல்கலைக்கழகங்கள் மட்டும் என்ன? அரசாங்கத்தின் பொது சனத்தொடர்பு சாதன நிறுவனங்கள் நான்கும் ஆயுதப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவை நிறுவனம், ''லேக் ஹவுஸ்'' எனப்படும் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம் ஆகிய நான்கு பொதுசனத் தொடர்பு நிறுவனங்களும் முழுக்க முழுக்க இராணுவத்தின் பொறுப்பின் கீழேயே இப்போது செயற்படுகின்றன.

பிரஸ்தாப நிறுவனங்களை, ஆயுதபலம் கொண்டு, தீவிரவாதக் குழுவினர் கைப்பற்றிவிட இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே இந்த முன்னேற்பாடு, மனிதன் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றை நினைப்பது போல, நடப்பதுபோல, அரசாங்கத்தின் முன்னேற்பாட்டு நடவடிக்கை திடீரென வேறு பெறுபேறுகளையும் கொண்டுவரலாம். மீளுந் தாக்கத்தை (Reversible Reaction) உண்டு பண்ணலாம் எனச் சொல்ல வந்தோம். பல நாடுகளில் நடக்கும் அரசியல் காட்சி மாற்றங்களை நோக்கும் போது, இலங்கையில் திடீரென ஒரு புரட்சிச் சதி ஏற்படும் என்று ஏன் ஊகிக்க முடியாது என்று அனுபவம் உள்ள அரசியல் அவதானிகள் கேட்கிறார்கள்:

நாடு இன்று மிகவும் நெருக்கடியான. எந்தப் பக்கத்தாலும் அசைந்து செல்ல முடியாதவாறு, இயங்க முடியாதவாறு அரசியல் விளிம்பில் நிற்கிறது. அவ்வாறு இருக்கும் போது, முக்கிய விவகாரங்களை கையாளும் கேந்திர நிலையங்களை இராணுவத்திடம் ஒப்படைத்தால் விளைவு எப்படியாகும் என்பதையும் சிந்திக்கத் தானே வேண்டும்?

அமைச்சர் காமினி திஸநாயக்கா, கம்போடியா பற்றியும் பொல்பொட் ஆட்சி பற்றியும் பிரஸ்தாபித்திருப்பதை வெறும் பத்திரிகைச் செய்தியாக நினைத்து இலேசானதாக எடுத்துவிட முடியாது. அவருடைய கூற்றின் நோக்கம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் நாட்டு நெருக்கடியும், அரசு அதனைக் கையாள எடுத்து வரும் நடவடிக்கைகளும் ஒரு சமாந்தரத்தை வரைய வைக்கிறது!

ஜெயவர்த்தனாவைத் தவறாக வழி நடத்திய அதே இராணுவ அதிகாரிகள் தான் தற்போதைய தலைமையையும் வழி நடத்துகிறார்கள் — என்று அமைச்சர் காமினி கூறியிருப்பதும் கருத்தாழம் மிக்கது. பல உள் நுட்பங்களை உணர்த்துவது என்றால் மிகையாகாது.

ஜனநாயகக் கட்டமைப்பில் பாதுகாப்புப்படைகள் என்று அலங்காரமாக அழைக்கப்படும் ஆயுதப்படைகள் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கெனவே அமைக்கப்படுகின்றன. ஆனால் அவை அனேகமாக அரசாங்கத்தைக் காப்பாற்றும் சேடயங்களாகவே பல சந்தர்ப்பங்களிலும், பல சட்டங்களிலும் செயற்படுகின்றன. அந்த வழி மாற்றத்தால், அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி படைகள் அரசாங்கத்தையும் மேலாண்மை (Supersede) புரிந்து அதிகாரத்தைத் தமது கையில் எடுத்துக் கொண்டு, மக்களின் பரம எதிரிகளாக மாறி விடுவது உண்டு. இந்த மாற்றங்களுக்கு உலக அரசியலில் இடி அமின், பொக்காசா போன்ற பலர் உதாரணத்துக்கு உள்ளனர்.

எனவே, அரசாங்கம் எதற்கு எடுத்தாலும் படைகளின் பலத்தையும், உதவியையும் பயன்படுத்தும் பழக்கம் ஆபத்தையே உருவாக்கும். அது வாக்குரிமை மூலம் அரசாங்கத்தை நிறுவிய மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்பதையும் மறந்துவிடலாகாது.

## நற்சமூக நிலையம் மூலம் நெடுந்தீவு மக்களுக்கு உதவி

நெடுந்தீவு, ஆக. 18

நெடுந்தீவு பங்குப் பொது நிலையினர் கழகத்தின் முயற்சியால் யாழ். மேற்றிராசன நற் சமூக நடு நிலையம் நெடுந்தீவில் உள்ள கஷ்டப்பட்ட மக்களுக்கு ரூபா 65 ஆயிரம் நிதியுதவி வழங்கியது.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. எம். வி. அமிர்தகுமார், கழகத் தலைவர் திரு. க. அந்தோனிப்பிள்ளை பொதுச் செயலாளர் புலவர் அ. வெ. அரியநாயகம் ஆகியோர் உள்ளூர் உற்பத்திசுய தொழில் முயற்சிகளான பன்னவேலை, கயிறு திரித்தல் போன்ற தொழில் முயற்சிகளுக்கு இந்த உதவிப் பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென உதவி பெற்றுக்கொண்ட குடும்பங்களைக் கேட்டுக் கொண்டனர்.

மீனவர்களுக்கும் ஏற்கனவே இது போன்ற உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

எல்லாமாக சுமார் ரூபா 1½ லட்சம் வரை மேற்றிராசனம் மூலம் கிடைத்திருப்பதாகத் தெரிந்தது. (இ-111)

### புதிதாக 100 சுங்க உத்தியோகத்தர்

கொழும்பு ஆக. 18

இலங்கை சுங்கத் திணைக்களத்துக்கு புதிதாக 100 சுங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கடமை ஏற்றுள்ளனர்.

இவர்களை சுங்கப் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு. என். ஜே ஜெயராஜா வரவேற்று உரை நிகழ்த்தினார்.

சுங்க இயக்குநர் நாயகம் திரு. டி. வீரசேகராவுக்கு உத்தியோகத்தர்களை அறிமுகப் படுத்தி வைத்தார். (இ)

# பழுதடைந்த "காஸ் தேர்பைன்" இயந்திரம் திருத்தப்பட்டால் வடக்குக்கு மின்சாரம்

## சுவிஸ் பொறியியலாளர் குழு வர வேண்டும் என்கிறார்கள் லங்கா சிமெந்து அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஆக. 18

சுவிஸ் நாட்டில் இருந்து பொறியியலாளர் குழு இங்கு வந்து லங்கா சிமெந்து நிறுவனத்தில் உள்ள "காஸ் தேர்பைன்" ஜெனரேட்டரை திருத்தினால், வடக்குக்கு மேலதிகமாக சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கலாம்.

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன மின்நிலைய அதிகாரிகள் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தனர்.

லங்கா சிமெந்து நிறுவன மின்நிலைய அதிகாரிகளிடம் மின்சாரம் வழங்குவது சம்பந்தமாக கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது.

அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்ததாவது;

காங்கேசன் சிமெந்து நிறுவனத்தின் மின்நிலையத்தில் 83 ஆம் ஆண்டு இரண்டு காஸ் தேர்பைன் மின் இயந்திரங்களையும், ஒரு ஸ்ரீம் தேர்பைன் இயந்திரத்தையும் பொருத்த எடுத்த முயற்சியின் காரணமாக மூன்று இயந்திரங்களும் இங்கு கொண்டுவரப்பட்டன.

அதில் ஒரு காஸ் தேர்பைன் இயந்திரம் முழுமையாகப் பொருத்தப்பட்டு 84 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 87 ஆம் ஆண்டுவரை சிமெந்து நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

87 ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதல் சம்பவத்தில் ஒருமாதத்துக்கு மேல், இவ்வியந்திரம் இயக்கப்படாததால், கம்பியூட்டர் கருவி பழுதடைந்துவிட்டது.

ஆனாலும் பின்பு அதிகாரிகள் எடுத்த முயற்சியால் 88 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட மின்சாரத்தடையின் போது இவ்வியந்திரம் மூலம் சுழற்சி முறையில் யாழ் மாவட்டத்துக்கு மின்சாரம் ஒரு சில நாட்களுக்கு வழங்கப்பட்டது.

பின் கம்பியூட்டர் கருவி மீண்டும் முற்றாக ஸ்தம்பித்ததால், மின்சாரம் வழங்க முடியாது போய்விட்டது.

தற்சமயம் ஏற்பட்டுள்ள மின் தடைக் காரணத்தை அடுத்து மீண்டும் இவ்வியந்திரத்தை இயக்கி மின்சாரம் வழங்க மின்சாரசபை அதிகாரிகளுடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம்.

இரு நிறுவனங்களின் உயர் மட்ட அதிகாரிகளும் சம்மதிக்கும் பட்சத்தில் சுவிஸ் நாட்டில் இருந்து பொறியியலாளர் குழு வரவழைக்கப்பட்டால் இவ்வியந்திரம் மூலம் மின்சாரம் வழங்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இவ்வதிகாரிகள் குழு வருவதன் மூலம் மற்றைய காஸ் தேர்பைன் இயந்திர வேலைகளையும் பூர்த்தி செய்யவும், ஸ்ரீம் தேர்பைன் இயந்திரத்தைப் பொருத்தவும் வாய்ப்பு ஏற்படும்.

இதன் மூலம் சிமெந்து நிறுவனங்கள் இயங்கவும், வடக்குக்கு மின்சாரம் வழங்கவும் முடியும்.

இப்படி அவ்வதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

தற்போது சுன்னாகம் ஜெனரேட்டர் மூலம் வடக்குக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுவது தெரிந்ததே. லங்கா சிமெந்து லிமிட்டட் ஜெனரேட்டரும் பயன்படுத்தப்படுமானால் மேலதிக மின்சாரம் கிடைக்க வழி பிறக்கும். (இ-3)

### சேமலாப நிதியிலிருந்து கடன்:

## பெற்ற படிவங்கள் 300; திருப்பி கையளித்தது 40!

யாழ்ப்பாணம் ஆக. 18

சேமலாப நிதியில் இருந்து வீடு கட்டக் கடன் பெற 300 பேர் விண்ணப்பப் படிவம் பெற்றிருந்தனர். எனினும் 40 பேரே கடன் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

தொழிற் திணைக்களம் இதனைத் தெரிவித்தது. கையளிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மத்திய வங்கிக்கு அனுப்பியுள்ளதாக தொழிற்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

## பனை அபிவிருத்தியில் முழுக் கவனம் செலுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 18

மத்திய அரசுபாரிய வேலைத் திட்டங்களை தென்னை மையமாக வைத்து நடத்தியிருக்கிறது. ஆனால் பனையை மையமாக வைத்து நடத்தவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்து உரை நிகழ்த்தியபோது நிதியமைச்சர் பெ. கிருபாகரன் இவ்வாறு கூறினார்.

''பனையைப் பாதுகாத்து பனை சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண அரசு சகலநடவடிக்கைகளையும் எடுக்கும்'' என்றும் அவர் கூறினார்.

### நல்லூர் கந்தன் ஆலயத்தில்

# தங்கள் கைவரிசையை லாவகமாக காட்டும் 'பிக்பொக்கெட்'காரர்கள்

## தோலிருக்கச் சுளை விழுங்கும் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், ஆக 18

நல்லூர் கந்தசுவாமிஆலய உற்சவத்தில் உள்வீதியில் சனநெரிசலுடன் சேர்ந்து கொள்ளும் 'பிக்பொக்கட்' ஆசாமிகள் தம் கைவரிசையை லாவகமாகச் செய்து முடிக்கிறார்கள்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவின் போது இதுவரை 50க்கு மேற்பட்டவர்கள் தம் பேர்ஸ்களை, கைப்பைகளை, நகைகளை இழந்துள்ளார்கள்.

பிக்பொக்கட் திருடர்கள் குறித்து பக்தர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று மாநகர அலுவலக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே வேளை கடந்த புதன் கிழமை முருகனைக் கும்பிட்டுக் கொண்டிருந்த பெண்ணொருவரிடம் இருந்து கைப்பை ஒன்று திருடப்பட்டது.

உள் வீதியில்மேற்படி பெண் தனது கைப்பையை பெரிய பை ஒன்றுக்குள் வைத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்த சமயம் திருட்டு ஆசாமிதோலிருக்க சுளை விழுங்கியநிலையில் பையை வெட்டி கைப்பையை எடுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டார்.

கோயில் பின் வீதியில் கிடந்த அந்தகைப்பை பின்பு மாநகரசபை அலுவலகத்தில ஒப்படைக்கப்பட்டது.

அப்பெண் கைப்பையை அங்கு பெற்றுச் சென்றார். அவரின் வீட்டுத்திறப்புக்கள் மட்டும் கைப்பைக்குள் இருந்தன ரூபா 300 காணமற் போய் இருந்தது; (இ-3)

## தற்காலிக நியமனத்துக்கு வைத்திய அதிகாரிகள் சங்கம்

### எதிர்ப்புத் தெரிவிக்காது

கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பீட இறுதி ஆண்டுமாணவர்களுக்குத் தற்காலிக நியமனம் வழங்குவது என்ற சுகாதார அமைச்சின் முடிவை எதிர்ப்பது இல்லை என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

ஆனால் சுகாதார அமைச்சின் இந்த முடிவு, வருங்காலத்தில் ஒரு முன்னோடியாக எடுத்துக் கொள்ளப் படக்கூடாது என்று சங்கம் மேலும் தீர்மானித்துள்ளது.

சங்கத்தின் செயற்குழு கடந்த ஞாயிறு கூடி இந்த முடிவை எடுத்தது.

நாட்டின் தற்போதையசூழ்நிலையில் இறுதியாண்டு வைத்திய மாணவருக்கு தற்காலிக நியமனம் வழங்குவது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. முதலாவது உலகயுத்தத்தின் போது பிரிட்டனும் இதே மாதிரிச் செய்தது என்றும் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ- எ)

## அம்பாறையில் சிறுபோகம் ஒருவகைப் புழுவால் பாதிப்பு

அம்பாறை, ஆக. 18

அம்பாறை மாவட்ட சிறுபோக நெற்செய்கை இனம் தெரியாத ஒருவகைப் புழுத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் புழுவின் தாக்கத்தினால் பாதிக்கப்படும் நெற்பயிரிலிருந்து வெளியாகும் நெற்கதிர்கள் வெறும் பதராக மாறிவிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் கதிகலங்கி நிற்கும் இவ்வேளையில் இந்தப் புழுத்தாக்கம் தொடர்பாக ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகள் வழங்க சம்பந்தப்பட்ட விவசாயப்பகுதி அதிகாரிகள் இன்னும் முன்வரவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (இ-14)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## தமிழின் எழிற் பொருளே

ஓமெனும் மந்திரம் உலகெங்கும்
ஒலித்திட தீவினை பறந்தோட
நான்முகன தம்பியே உனைத் தினமும்
நாடிடும் அடியவர்க் கருள் தருவாய்

மாமயில் மீதுலா வந்திடுவாய் வள்ளி
மாது தெய்வானை துணைசேர
தூயனே தமிழின் எழிற் பொருளே
துயர்கள் களைந்து துணை செய்வாய்

— நெடுந்தீவு லக்ஸ்மன்

(இன்று [illegible] திருவிழா)

### சமய நிகழ்ச்சிகளில்

### உற்சவம்

கோப்பாய், ஆக 18

கோப்பாய் வடக்கு ஸ்ரீ ஆழ்வார் கோவிலின் வருடாந்த உறியடி உற்சவம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (க-72)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக. 18

மன்னார் உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (க)

### இன்று கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம் ஆக. 18

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தொடர் விழாவில் இன்று வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வர் திரு. க. கயிலாயநாதனின் ''எங்கே தேடுகின்றாய்'' என்னும் பொருள்பற்றிய சங்கீத கதாப்பிரசங்கம் நிகழவுள்ளது. (க)

### அலுமினிய பாத்திரங்கள்

கோப்பாய் ஆக. 18

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் அண்மைக் கால அசம்பாவிதங்களின் போது வீடுகளை முற்றாக இழந்தவர்களுக்கு அண்மையில் அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. (இ - 72)

## திருமுகம்

### கூ. சங்கக் கிளை

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் சீனி, மா இல்லை.

இதுபற்றி 14-ஆம் திகதி மேற்படி சங்கத்தின் தலைவரைக் கேட்டபோது அவர் கூறினார்:

எமது சங்கம் நீராவிப்பிட்டியில் உள்ள அரசாங்க உணவுக் களஞ்சியத்துக்கு, சென்ற மூன்று நாட்களாக வாகனங்களை அனுப்பியது. அங்குள்ள நிரந்தரமான களஞ்சியப் பொறுப்பாளர் (Stores - Keeper) லீவில் சென்றுவிட்டார். தற்போது கடமை செய்பவர், வாகனங்களைத் திருப்பிவிட்டார்

இதனை ஒட்டி அரசாங்க அதிபர், உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஆகியோரிடம் சென்றபோது அவர்களும் இல்லை. அவர்கள் வந்த பின்னரே சீனி, மா மற்றும் பொருள்களைப் பெற்றுக் கொடுக்கலாம். மக்கள் கஷ்டம் தீரவழி என்ன?

அ. ரமணன்
முல்லைத்தீவு.

### நீர்க்குழாய்

நாவலர் வீதி ஆனைப்பந்திச் சந்தியில் உள்ள நீர்க்குழாய் வெகுகாலமாக அநாதரவாக இருக்கின்றது.

இதை அண்டியுள்ள சுமார் 25க்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்தக் குழாயை நம்பியிருந்தன. இப்பொழுது இந்தக் குழாயில் தண்ணீர் வராததினால் நாங்கள் நன்னீருக்கு அயல் வீடுகளுக்கு அலைய வேண்டியுள்ளது:

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்நீர்க்குழாயைத் திருத்த நடவடிக்கை எடுப்பார்களா?

கி. சோதி
ஆனைப்பந்தி:

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம். ஆக. 18

அண்மைக் காலமாக வடபகுதிக்கான மின் விநியோகம் தடைப்பட்டதன் காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து சுழற்சி முறையில் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய சுழற்சி முறை மின்சாரத்தை சொற்பநேரம் மட்டுமே வழங்குவதால் டாக்டர்களினதும், நோயாளர்களினதும், தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமலிருந்தது.

இந்நிலையைக் கவனத்தில் எடுத்த வடக்கு-கிழக்கு மாகாண அரசின் யாழ்: மாவட்ட உறுப்பினர், மாகாண அரசுடன் தொடர்பு கொண்டு தொடர்ச்சியாக சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

## கண்டதும் கேட்டதும்

மின்சாரப் பிரச்சினை காரணமாக யாழ்: நகரப் பகுதியில் குழாய் மூலம் வரும் குடிதண்ணீரைச் சேகரிப்பதில் மக்கள் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள்.

அவர்களது நாளாந்தத் தண்ணீர்ப் பாவனையை ஈடு செய்வதற்கு குளாய் மூலம் குறிப்பிட்ட நேரம் மட்டும் விநியோகிக்கப்படும் குடி தண்ணீர் பெரிதும் உதவுகிறது.

அதே சமயம் நகரின் சில பகுதிகளில் வீதி ஓரங்களில உள்ள குழாய்களில் இருந்து குடி தண்ணீர் வீணாக ஓடிக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இதுபற்றி எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

குருநகர்ப் பகுதியில் இருந்து ஓர் அன்பர் முறைப்படுகிறார்.

அப்பகுதியில் உள்ள வீதி ஒன்றில் ஐந்து குழாய்களுக்கும் ஐந்து ''நோய்கள்'' உண்டு என்று அவர் பட்டியல் போட்டு மனம் வெதும்பி உள்ளார்.

இந்த நோய்களுக்குப் பரிகாரம் காண வேண்டிய ''டாக்டர்கள்'' யாழ். மாநகரசபை குடி தண்ணீர் விநியோகப் பகுதி ஊழியர்களே.

அவர்களுக்கும் என்னென்ன பிரச்சினைகளோ?

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீடமைப்புக் குழுக்களின் சிபார்சு தேவை

யாழ்ப்பாணம், ஆக.18

யாழ் மாவட்டத்தில் வீடமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்டுவரும் வீடமைப்புக்கடன்கள், ஐக்கிய நாணய சங்கங்கள் அமைக்கப்படாத கிராமசேவையாளர் பிரிவுளில் 'வீடமைப்புக் குழுக்களின் சிபார்சின் அடிப்படையிலேயே வழங்கப்பட உள்ளன.

வீடமைப்பு அதிகாரசபை வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக ஐக்கிய நாணய சங்கங்கள் இல்லாத கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் ஆறு அங்கத்தவர்களைக்கொண்ட வீடமைப்புக் குழுக்கள் கிராமசேவை உத்தியோகத்தினரால் அமைக்கப்பட்டுவருகின்றன.

இக்குழுக்களில் பொது ஸ்தாபனங்களான சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆலயபரிபாலன சபைகள் போன்றவற்றின் பிரதிநிதிகளே அங்கம் வகிப்பர். (இ-13)

## குடிதண்ணீர் வழங்க பவுஸர்

அம்பாறை, ஆக. 18

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறைப் பகுதியில் நீர்வசதியின்றி அவதியுறும் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கென வடக்கு — கிழக்கு மாகாண சபை 'பவுசர்' ஒன்றை வழங்கியிருக்கின்றது.

பதினொரு லட்சம் ரூபா பெறுமதியான இந்த பவுசர் மூலம் தினமும் நீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-14)

## விசேஷ உரம்

பண்டத்தரிப்பு, ஆக 18

தென்னை, நெல் ஆகியவற்றில் சிறந்த விளைச்சலைப் பெறுவதற்கான விசேஷ உரத்தை தொல்புரம் கமநல சேவை நிலையம் விற்பனை செய்கிறது.

தென்னைச் செய்கைக்கு உரிய உரக்கலவையைப் பெற்றுத் தரும்படி விவசாயிகள் விடுத்த வேண்டுகோளையடுத்து அவை தருவிக்கப்பட்டுள்ளன என்று பெரும்பாக உத்தியோகத்தர் திரு. என். இராசேந்திரம் தெரிவித்தார். (இ-120)

## எள்ளுப்பிட்டியில் சிரமதானம்

மன்னார் ஆகஸ்ட் 18

திருக்கேதீஸ்வரம் எள்ளுப்பிட்டியில் கிராமசேவகர் ஜனாப் எஸ். இஸதீன் தலைமையில் சிரமதானப் பணி நடைபெற்றது.

இப்பகுதி வாழ் 200 பொது மக்கள் இச் சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.

பத்துக்கும் மேற்பட்ட அரச, பொது ஸ்தாபன உத்தியோகத்தர்களும் இதில் பங்குபற்றினர்.

எள்ளுப்பிட்டியில் உள்ள சிறிய, பெரிய வீதிகள் உட்பட விளையாட்டு மைதானமும் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (இ)

## நிரப்பப்படாத பதவிகள்

தாளையடி ஆகஸ்ட் 18

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் பல காலமாக நிரப்பப்படாமல் இருந்துவருகின்றன.

இவ் உத்தியோகத்தர்கள் இல்லாமையில் வடமராட்சி கிழக்கில், உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களையும், விளையாட்டுக் கழகங்களையும் புனரமைப்பு செய்ய முடியாமல் உள்ளதாக தெரியவருகின்றது. (இ-144)

## சிரமதானம்

தாளையடி, ஆக 18

பஸ்சேவை நீடிக்கப்பட்டுள்ள ஆழியவளை கிராமஅபிவிருத்திச் சங்கமும், சுலைவாணி சனசமூகநிலையமும் இணைந்து சிரமதானமூலம் செப்பனிட்டனர்.

இதனையடுத்து இப்பாதையின் போக்குவரத்து சீரடைந்துள்ளது. (இ-144)

# வடக்கு-கிழக்கு மாகாண அரசு பதவி வெற்றிடங்கள்

## வடக்கு - கிழக்கு மாகாண தட்டெழுத்தாளர் சேவையின் (ஆங்கிலம்) ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை — 1989

வடக்கு-கிழக்கு மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவையில் சேர விரும்பும் இருபாலாருக்குமான போட்டிப் பரீட்சையொன்று பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது:-

**திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கல்முனை, வவுனியா.**

பரீட்சார்த்திகள் ஏதேனும் மூன்று பரீட்சை நிலையங்களை முன் விருப்ப அடிப்படையில் தெரிவு செய்யலாம். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லா ஏதேனும் பரீட்சை நிலையம் தள்ளுபடி செய்யப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

2 தகுதி:- இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள்

(அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்திகள் 18 வயதிற்கு குறையாதவர்களாயும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்:

(ஈ) வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது கடைசி விண்ணப்ப தேதிக்கு முந்திய 6 வருட கால எல்லைக்குள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வதிந்திருத்தல் வேண்டும். அல்லது தொடர்ச்சியான 5 வருடங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடுத்தரக் கல்வி பெற்றிருக்க வேண்டும். பரீட்சார்த்தியின் பெற்றோர்களில் எவராவது இடமாற்றத்திற்கு அடங்கிய அரச சேவையிலோ, உள்ளூராட்சி சேவையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ கடமையாற்றுபவராக அல்லது கடமையாற்றியவராக இருப்பின், அப்பெற்றோர் எவராவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்திருப்பின் குறிப்பிட்ட பரீட்சார்த்தி தகுதி பெறுபவர் ஆவார்.

(உ) பின்வரும் தராதரங்களில் ஒன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும்.

1) சிரேட்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியம் ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2 பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது ஆங்கில இலக்கியத்துடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

3) பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தர)ப் பரீட்சையில் ஆங்கிலமொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது ஆங்கில இலக்கியத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருவருட ஆங்கில தட்டெழுத்து அனுபவம் கொண்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

4) தேசிய பொதுக் கல்விச்சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியை முதல் அல்லது இரண்டாம் மொழியாகக் கொண்டு ஆறு பாடங்களில் ஏ அல்லது பி அல்லது சி தராதரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

5) அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் ஆங்கில மொழி மூலம் குறைந்தது எட்டாம் தரத்திலாவது சித்தியடைந்தவராயும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில தட்டெழுத்து இரண்டு வருடத்துக்கு அனுபவம் பெற்ற சான்றிதழ் பெற்றி[ரு]த்தல் வேண்டும்.

(ஊ) சிறந்த உடல் நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்;

3. வேதனத்திட்டம்:- ரூபா 17,280 — 14 X 480 — 6 X 600 — 27,600

4. விண்ணப்பங்கள்:-

i). இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த விளம்பரத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய முழுத்தாளின் அரைத்தாளில் விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

ii). விண்ணப்பங்கள் செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு. திருகோணமலை என்ற முகவரியிடப்பட்டு 08 - 09 - 1989 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாகப்பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவை பரீட்சை'' என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

iii). பரீட்சார்த்திகள் 40 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை காசுக் கட்டளை மூலமாக அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளையை ''செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திருகோணமலை'' என பெறுதல் வேண்டும்.

iv). விண்ணப்பங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படலாகாது:

v): பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வருவோருள் யாரேனும் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

(அ) சமாதான நீதிவான்

(ஆ) சத்திய பிரமாண ஆணையாளர்

(இ) வழக்கறிஞர்

(ஈ) பிரசித்த நொத்தாரிசு

(உ) அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையின் அதிபர்

(ஊ) கடற்படையை அல்லது வான் படையை அல்லது தரைப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர்

(எ) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்பவரும் ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறுபவருமான அரசாங்க உத்தியோகத்தர்

(ஏ) பொலீசு சேவை கசற் நிரல் உத்தியோகத்தர்

(ஐ) வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள சமயக்குரு

5: பரீட்சைத் திட்டம்:- இரண்டு பாகமாக இப்பரீட்சை நடாத்தப்படும் அவை

பாகம் 1 எழுத்துப் பரீட்சை (விபரங்கள் பின்னர் பிரசுரிக்கப்படும்)

பாகம் 11 வாய்மொழிப் பரீட்சை

6 ஏற்கனவே ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இருப்பவர்கள் அனைவரும் இவ்விளம்பரத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தில் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

35, மக்கேசர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
11 - 08 - 1989

---

சுட்டிலக்கம்:-

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடக்கு-கிழக்கு மாகாண ஆங்கில தட்டெழுத்தாளர் சேவையில் (11) ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை**

குறிப்பு:- (இப்படிவம் பரீட்சார்த்தியினால் செம்மையாகவும் தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.)

1. 1 : 1 முதலெழுத்துக்களுடன் பெயர்:—
   1 : 2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் அல்லது பெயர்கள்:—
   1 : 3 பால்:—
   1 : 4 விவாகம் செய்தவரா / செய்யாதவரா:—
   1 : 5 தேசிய இனம்:—

2: முகவரி:—
   மாவட்டம்:—

3. விளம்பரத்தின் பகுதி 2 (ஈ) இன் பிரகாரம் பரீட்சார்த்தியின் பிறப்பு பெற்றோரின் வதிவிடம் பற்றிய விபரம்:—

4. பரீட்சார்த்தி விரும்பும் பரீட்சை நிலையங்கள்:—
   4 : 1 1 ஆம் தெரிவு:—
   4 : 2 2 ஆம் தெரிவு:—
   4 : 3 3 ஆம் தெரிவு:—

5. 5 : 1 பிறந்த திகதி:—
   5 : 2 1989. 09. 08 இல் வயது:
   வருடம் ......... மாதம் ......... நாட்கள் .........

6. கல்வித் தகைமைகள்:—
   6 : 1 விளம்பரத்தின் பகுதி 2 (உ) (3) ஆம் பந்தியின் படி தகுதிபெறுபவராயின் அனுபவச் சான்றிதழ்கள் பற்றிய விபரம் தருக:—
   6 : 2 பரீட்சையின் பெயர்:—
   6 : 3 பாடங்கள்:—

| பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பரீட்சை நிலையமும் சுட்டிலக்கமும் |
|---|---|---|
| ............ | ...................... | .................. |

6 : 4 உயர் கல்வித் தகைமைகள் :-
   1. பரீட்சையின் பெயர் :-
   2. வருடம் :-
   3. சுட்டிலக்கம் :-
   4: பாடங்கள் :-

7. எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீர் குற்றத் தீர்ப்புப் பெற்றுள்ளீரா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் திகதி, தவறின் தன்மை, நீதிமன்றத்தின் பெயர், வழக்கு இலக்கம் என்பனவற்றைக் கூறுக:-

8: நான் தந்துள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு சரியானவையும் உண்மையானவையும் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்;

9. 40/- ரூபா பெறுமதியுள்ள காசுக்கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
   காசுக்கட்டளையின் இலக்கம் :-..............
   காசுக்கட்டளை பெறப்பட்ட தபாற் கந்தோர் பெயர் :-..............
   திகதி :-..............

...........................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்

10: பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :-
நான் திரு / திருவாட்டி / செல்வி............என்பவர் தற்போது ................ இல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் .............. இல் தற்போது வதிகிறார் என்றும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை ............... ஆம் ஆண்டு ......... மாதம் ......... ஆந் திகதி என்முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

...........................................
பரீட்சார்த்தியின் கையொப்பத்தை
அத்தாட்சிப் படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-.........
முகவரி :-.........
நிலை :-.........
திகதி :-.........

(வி/3219)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யெகோவா சாட்சிகள் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக. 18

யெகோவாவின் சாட்சிகள் மாவட்ட மாநாடு இன்று 18 ஆம் திகதி வெள்ளி முதல் 20 ஆம் திகதி ஞாயிறு வரை சாவகச்சேரி பெரியமாவடி பேரம்பலம் வீதியில் அமைந்திருக்கும் இராஜ்ய மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

''தேவ பக்தி'' என்பதே இம் மாநாட்டின் தொனிப் பொருள். இன்று காலை 10-20 க்கும் நாளை காலை 9-30 க்கும் ஞாயிறு காலை 8-20 க்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

ஞாயிறு காலை 9-30 க்கு ''யெகோவிற்கு உங்களைக் கீழ்ப்படுத்துங்கள்'' என்ற தலைப்பில் ஒரு நாடகம் மேடையேற்றப்படும். இதன் பின் ''தேவ பக்தியுள்ள ஜனங்களுக்கு மீட்பு சமீபம்'' என்னும் தலைப்பில் காவற் கோபுர சங்கப் பிரதிநிதி திரு. எஸ் தியோப்பிலஸ் ஒரு பகிரங்கப் பேச்சைக் வழங்குவார்.

## கிராம சேவையாளர் பிரிவு விஸ்தரிப்பு

வல்வெட்டித்துறை, ஆக 18

கரவெட்டி கிராமசேவையாளர் பிரிவு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

முன்பு கிராம சேவையாளர் பிரிவுகள் பத்தொன்பதாக இருந்தன. அவை தற்போது முப்பத்தைந்தாக அதிகரிக்கப் பட்டுள்ளன.

அதிகரிக்கப்பட்டுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் பன்னிரெண்டு பேரும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் நான்கு பேரும் கிராம சேவை உத்தியோகத்தர்களாக பதவி மாற்றப்பட்டுள்ளார்கள். (இ-160)

## எழுதுவினைஞர்கள் நியமனம்

மட்டக்களப்பு, ஆக. 18

மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் ஒன்பது அமைய எழுதுவினைஞராக புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பதவிக்கு ஆயிரத்து 200 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். (உ-21)

## மரணமானார்

குருநகர், ஆக. 18

சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் மயக்கமடைந்து விழுந்தார். யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படுகையில் அவர் மரணமானார்.

அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த கந்தையா தங்கராசா [வயது 37] என்பவரே இறந்தவர் ஆவார். (இ-51)

## பஸ் மூலம் தபால் சேவை

மட்டக்களப்பு, ஆக 18

திருமலை — மட்டக்களப்பு தபால் சேவையும் தற்போது கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் மூலமே நடைபெறுகிறது. (உ-21)

## விடுவிப்பு

பச்சிலைப்பள்ளி, ஆக 18

கடந்த மே மாதம் தேடுதலின் போது அழைத்துச் செல்லப்பட்ட முசமாலையைச் சேர்ந்த சி. பரமானந்தம் என்பவர் அண்மையில் விடுவிக்கப்பட்டார். (ஜ-117)

## முள்ளியில்

வல்வெட்டித்துறை, ஆக 18

முள்ளியில் இந்திய இராணுவத்தினர் தமது புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளார்கள். (இ-160)

## விளையாட்டுப் போட்டி

கொக்குவில், ஆக 18

யாழ். பாலர் கல்விக் கழகத்தினரின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இக் கழகத்தின் நிர்வாகத்தில் இயங்கும் 14 பாலர் பாடசாலைகள் இப் போட்டிகளில் பங்கு பற்றும்.

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப் போட்டிகளில் வண்ணார் பண்ணை தெற்கு கொத்தணி அதிபர் திரு. சி. சிவசரவணபவன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (உ-69)

# வடக்கு - கிழக்கு மாகாண அரசு பதவி வெற்றிடங்கள்

## வடக்கு - கிழக்கு மாகாண [ஆங்கில] சுருக்கெழுத்தாளர் சேவையின் IIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை — 1989

வடக்கு - கிழக்கு மாகாண சுருக்கெழுத்தாளர் சேவையின் II ஆம் தரத்திற்கு சேரவிரும்பும் இருபாலாருக்குமான போட்டிப் பரீட்சையொன்று பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது.

**திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கல்முனை, வவுனியா.**

பரீட்சார்த்திகள் ஏதேனும் மூன்று பரீட்சை நிலையங்களை முன்விருப்ப அடிப்படையில் தெரிவு செய்யலாம்.
போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத ஏதேனும் பரீட்சை நிலையம் தள்ளுபடி செய்யப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

2. தகுதி:- இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள்
   - (அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.
   - (ஆ) பரீட்சார்த்திகள் 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்;
   - (இ) நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்.
   - (ஈ) வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது கடைசி விண்ணப்பத்தேதிக்கு முந்திய 6 வருட கால எல்லைக்குள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வதிந்திருத்தல் வேண்டும். அல்லது தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடுத்தரக் கல்வி பெற்றிருக்க வேண்டும்; பரீட்சார்த்தியின் பெற்றோர்களில் எவராவது இடமாற்றத்திற்கு அடங்கிய அரச சேவையிலோ, உள்ளூராட்சி சேவையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ கடமையாற்றுபவராக அல்லது கடமையாற்றியவராக இருப்பின், அப்பெற்றோர் எவராவது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிறந்திருப்பின் குறிப்பிட்ட பரீட்சார்த்தி தகுதி பெறுபவர் ஆவார்;
   - (உ) பின்வரும் தராதரங்களில் ஒன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும்.
     1. சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் பாடத்திட்டம் (அ அல்லது ஆ) ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
     2. பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரணதர)ப் பரீட்சையில் பாடத்திட்டம் (அ அல்லது ஆ) ஆங்கிலமொழி அல்லது ஆங்கில இலக்கியம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:
        (ஒரே தடவையில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)
     3. பொதுக்கல்விச் சான்றிதழ் (சாதாரணதர)ப் பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது, ஆங்கில இலக்கியம், உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருவருட ஆங்கில சுருக்கெழுத்து அனுபவம் கொண்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
     4. தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் ஆங்கிலத்தை முதல் அல்லது இரண்டாம் மொழியாகக் கொண்டு ஆறு பாடங்களில் ஏ அல்லது பி அல்லது சி தராதரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
     5. அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் ஆங்கில மொழி மூலம் குறைந்தது எட்டாம் தரத்திலாவது சித்தியடைந்தவராயும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில சுருக்கெழுத்து இரண்டு வருடத்துக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி நெறியில் சித்தி எய்தியவராக இருத்தல் வேண்டும்.
     6. உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்ப கல்லூரிகளால் வழங்கப்பட்ட வர்த்தகக்கல்வி தேசிய சான்றிதழ், அல்லது சுருக்கெழுத்தாளர் சான்றிதழ்;
   - (ஊ) சிறந்த உடல் நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

3. வேதனத்திட்டம்:

   ரூபா 19,680 — 9 × 480 — 8 × 600 — 28,800

4. விண்ணப்பங்கள்:
   - i) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த விளம்பரத்தில் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய முழுத்தாளின் அரைத்தாளில் விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
   - ii) விண்ணப்பங்கள் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திருகோணமலை என்ற முகவரியிடப்பட்டு 8 — 09 — 1989 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ பரீட்சை செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '' மாகாண ஆங்கில சுருக்கெழுத்தாளர் சேவை பரீட்சை'' என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
   - iii) பரீட்சார்த்திகள் 40 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை காசுக் கட்டளை மூலமாக அனுப்புதல் வேண்டும்;
     காசுக்கட்டளையை ''செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திருகோணமலை என பெறுதல் வேண்டும்
   - iv) விண்ணப்பங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படலாகாது.
   - v) பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வருவோருள் யாரேனும் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.
     - (அ) சமாதான நீதிவான்
     - (ஆ) சத்தியப்பிரமாண ஆணையாளர்
     - (இ) வழக்கறிஞர்
     - (ஈ) பிரசித்த நொத்தாரிசு
     - (உ) அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையின் அதிபர்
     - (ஊ) கடற்படையை அல்லது வான்படையை அல்லது தரைப்படையை சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர்.
     - (எ) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்பவரும் ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறுபவருமான அரசாங்க உத்தியோகத்தர்.
     - (ஏ) பொலிஸ் சேவை கசற் நிரல் உத்தியோகத்தர்
     - (ஐ) வழிபாட்டுத் தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள சமயக்குரு

5. பரீட்சைத் திட்டம்:- இரண்டு பாகமாக இப்பரீட்சை நடாத்தப்படும்; அவை:
   - 1 எழுத்துப் பரீட்சை (விபரங்கள் பின்னர் பிரசுரிக்கப்படும்)
   - 11 நேர்முகப் பரீட்சை

6. ஏற்கனவே ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இருப்பவர்கள் அனைவரும் இவ்விளம்பரத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர்,
மாகாணசபை பொதுச்சேவை ஆணைக்குழு.
வடக்கு - கிழக்கு மாகாணம்.

35, மக்கேசர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
11 - 08 - 1989

---

சுட்டிலக்கம்:-

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### வடக்கு - கிழக்கு மாகாண ஆங்கில சுருக்கெழுத்தாளர் சேவையின் 11ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை

குறிப்பு:- (இப்படிவம் பரீட்சார்த்தியினால் செம்மையாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்:

1. 1 : 1 முதலெழுத்துக்களுடன் பெயர்:—
   1 : 2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் அல்லது பெயர்கள்:—
   1 : 3 பால்:—
   1 : 4 விவாகம் செய்தவரா / செய்யாதவரா:—
   1 : 5 தேசிய இனம்:—
2. முகவரி —
   மாவட்டம்:—
3. விளம்பரத்தின் பகுதி 2 (ஈ) இன் பிரகாரம்
   பரீட்சார்த்தியின் பிறப்பு பெற்றோரின் வதிவிடம் பற்றிய விவரம்:—
4. பரீட்சார்த்தி விரும்பும் பரீட்சை நிலையங்கள்—
   4 : 1 1 ஆம் தெரிவு:—
   4 : 2 2 ஆம் தெரிவு:—
   4 : 3 3 ஆம் தெரிவு:—
5. 5 : 1 பிறந்த திகதி:—
   5 : 2 1989 - 09 - 08 இல் வயது
   வருடம் ............ மாதம் .......... நாட்கள் ............
6. கல்வித் தகைமைகள்:—
   6 : 1 விளம்பரத்தின் 2 (உ) (3) ஆம் பந்தியின்படி தகுதிபெறுபவராயின், அனுபவச் சான்றிதழ் பற்றிய விபரம் தருக:—
   6 : 2 பரீட்சையின் பெயர்:—
   6 : 3 பாடங்கள்:

| பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பரீட்சை நிலையமும் சுட்டிலக்கமும் |
|---|---|---|
| .............. | ...... ... | .............. |

6 : 4 உயர் கல்வித் தகைமைகள் :-
   1. பரீட்சையின் பெயர் :- .........
   2. வருடம் : .........
   3. சுட்டிலக்கம் :- .........
   4. பாடங்கள் :- .........
7. எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீர் குற்றத் தீர்ப்புப் பெற்றுள்ளீரா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் திகதி, தவறின் தன்மை, நீதிமன்றத்தின் பெயர், வழக்கு இலக்கம் என்பனவற்றைக் கூறுக :-
8. நான் தந்துள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு சரியானவையும் உண்மையானவையும் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.
9. 40/- ரூபா பெறுமதியுள்ள காசுக்கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
   காசுக்கட்டளையின் இலக்கம் :- .........
   காசு கட்டளை பெறப்பட்ட
   தபாற்கந்தோர் பெயர் :- .........
   திகதி :- .........

.......... ..........
பரீட்சார்த்தியின் கையொப்பம்

10. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் ;-
   நான் திரு. / திருவாட்டி / செல்வி .............. என்பவர் தற்போது ........... இல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் ........... இல் தற்போது வதிகிறார் என்றும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை............ ஆம் ஆண்டு ........... மாதம் ........ ஆந் திகதி என் முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................
பரீட்சார்த்தியின் கையொப்பத்தை
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-
முகவரி :-
நிலை :-
திகதி :-

(சி-3220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

பயிலுநர் ஆசிரியர் தெரிவு

நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டோர்
போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற

1 வார துரித பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது அறிவு - பொதுஉளச்சார்பு

ஆரம்பம் 19 - 8 - 89

★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் (மு.ப 9-12 வரை)
★ இலவச பாடக்குறிப்புகள்; வினா-விடைப்பயிற்சிகள்
★ கட்டணம் ரூபா 150. 00 (முழுப்பயிற்சிக்கும்)

**ASTAN INSTITUTE**

101/10, Stanley Road, Jaffna.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
(C/3297)

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில்
# 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மட்டும்
# ஜனசக்தித் திட்டம் முதலில் அமுல்

யாழ்ப்பாணம், ஆக. 18

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டுமே ஜனசக்தித் திட்டத்தை செயல்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதும் இத்திட்டத்தை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் முதலில் தெரிந்து எடுக்கப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மட்டும் இத்திட்டம் பரீட்சார்த்தமாகச் செயல்படுத்தப்படும்.

பரீட்சார்த்த திட்டம் வெற்றி அளிக்கும் பட்சத்தில் ஏனைய பிரிவுகளுக்கும் இதனை விஸ்தரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் - வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா இரண்டு உதவி அரசாங்க அதியர் பிரிவுகளிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

## நன்றி தெரிவிப்பு

தாளையடி, ஆக 18

வடமராட்சி சம்பவங்களை அடுத்து வடமராட்சி கிழக்கிற்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உணவுப் பொருள்களை வழங்கியதுக்காக சர்வோதய இயக்கத்துக்கு ஆழியவளை கிராமஅபிவிருத்திச் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. (ஓ-144)

## நாடு திரும்பினார்

மன்னார், ஆக. 18

மன்னார் மாவட்ட மறை ஆயர் அதி வண கலாநிதி தோமஸ் சவுந்திரநாயகம் பரிசுத்த பாப்பரசரை சந்தித்து விட்டு ரோமாபுரியிலிருந்து கொழும்பு திரும்பினார். (க-ரி)

யா/இணுவில் சைவப்பிரகாச ம. வி.
இணுவில் சுன்னுகம்.

முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் தொழிற் திறன் அபிவிருத்திப் பயிற்சி பெற்ற மாணவர்களைப் பாடசாலையில் தொழில் பயிலுனராகச் செயற்பட அனுமதித்தல்

தொழிலகத்தையலும் உடை அமைத்தலும்

எங்கள் பாடசாலையில் மேற்படி பாட நெறியைக் கற்ற மாணவிகள் தொழில் பயிலுனராக செயற்பட விரும்பினால் உடனடியாக பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளவும்;

— அதிபர்

திகதி: 17-08-1989.

(சி-3507)

## மல்லாகம் கி. அபிவிருத்தி சங்கம் உதவி

யாழ்ப்பாணம் ஆக. 18

மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் ஆலய திருப்பணி வேலைகளை ஆரம்பிப்பதற்கு முதல்கட்டமாக மல்லாகம் கிராம அபிவிருத்திச சங்கம் 28 ஆயிரம் ரூபா செலவில் பத்துத்தூண்களை நிறுவிக் கொடுத்துள்ளது.

பழம் கோவில் இந்து இளைஞர் மன்றத்தினர் பொது மக்களிடம் இருந்து வசூல் செய்த 78 ஆயிரம் ரூபாவுடன் கூரை வேலைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இக்கோயில் பணியை செய்து முடிப்பதற்கு ஒரு லட்சம் ரூபா தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (இ - 10)

மருதனுமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின்
50 ஆம் ஆண்டு நிறைவு விழா
"பொன் விழா"

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா இம்மாதம் (ஆகஸ்ட்) 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறும். உங்கள் அனைவரையும் இவ்விழாவில் வந்து கலந்து எங்களுடன் சேர்ந்து எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்திப் போகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்:

ஞாயிறு 20 - 8 - 1989
காலை 7 - 00 — மணி பரி. நற்கருணை ஆராதனை
.. 10 - 30 — பக்திப்பாடல்கள்
மாலை 3 - 30 — "மனம்மாறிய மைந்தன்" (நாட்டுக்கூத்து)

திங்கட்கிழமை 21 - 8 - 1989
காலை 7 - 00 — மணி பரி: நற்கருணை ஆராதனை
.. 8 - 30 — .. திருமுழுக்கு ஆராதனை
.. 9 - 00 — .. நன்றி செலுத்தும் ஆராதனை
.. 11 - 00 — .. இசை நிகழ்ச்சி
மாலை 3 - 00 — .. பொதுக் கூட்டம்
.. 5 - 00 — .. மகிழ்ச்சியின் இல்லத் திற்கு அத்திவாரக் கல்லுநாட்டுதல் (முதியோர்களுக்கு உரிய இல்லம்)

வண. பிதா சேவக் சாம் அல்பிரட்.
(சாம் அண்ணன்)
(1619)

# ஒழுங்கான பார்வையைப் பெற சைவசித்தாந்தம் உதவுகிறது

## கலாநிதி வித்துவான் வேலன் கூறுகிறார்

ஒழுங்கான பார்வையைப் பெறத் துணைபுரிவதே சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தத்தை முழுமையாகப் படிக்க வேண்டும். தோத்திர நூல்கள், சாத்திர நூல்கள், அறநூல்கள் முதலியவற்றை முழுமையாக கற்க வேண்டும்.

நல்லை ஆதினத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த வகுப்பில் சிறப்புரை ஆற்றிய கலாநிதி வித்துவான் க. ந. வேலன் இவ்வாறு கூறினார்.

வகுப்புக்கு நல்லை திருஞான சம்பந்த ஆதீன மகா வித்துவான் திரு க. கணபதிப் பிள்ளை தலைமை வகித்தார். (க)

# நடிகமணியின் மனிதப் பண்பே கலையில் அவரை உயர்த்தியது

## கலந்துரையாடலில் விரிவுரையாளர் கருத்து

காங்கேசன்துறை ஆக. 18

'நடிகமணி வைரமுத்துவின் மனிதப்பண்பு எல்லோராலும் புகழப்படும் ஒன்றாகும். இந்த மனிதப் பண்புதான் அவரை இவ்வளவு தூரம் கலைஉலகில் உயர்த்தியது. அவர் கிடைத்த வாய்ப்புக்களை தட்டிக்கழிக்காமலும் தலைக்கனம் இல்லாமலும் வாழ்ந்த ஒரு கலைஞர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் தெல்லிப்பழை கலைஇலக்கியக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற நடிகமணி வி. வி. வைரமுத்துவின் நினைவுக்கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக நுண்கலை விரிவுரையாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு நா. சுப்பிரமணியன் தலைமைவகித்த இக்கலந்துரையாடலில் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, சைவப்புலவர் அனுவை நாகராஜன், சைவப்புலவர் சு. செல்லத்துரை, கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை. நாடகக் கலைஞர் வி. ரி. செல்வராஜா ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். (க - 68)

## பராமரிப்பு நிலையம்

கோப்பாய் ஆக.18

அண்மையில் கோப்பாய் பரிசுத்த கன்னி மரியாள் ஆலய பாலர் பகற் பராமரிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது பின்வருவோர் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: வண. ச ஏ. ஜெயராஜா, செயலாளர்: திரு ஆர் ராஜசிங்கம், தனாதிகாரி திரு. டி. ரி. ஜோன்

மேலும் 6 பேர் நிருவாக சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (இ 72)

## கதகளி நிகழ்ச்சி

மானிப்பாய், ஆக. 18

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினரின் ஆதரவில் நளாயினி அவர்களின் மாணவர்களான செல்வன் அபேதன், செல்வன் சுகந்தன் ஆகியோரின் கதகளி நிகழ்ச்சி நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, திருமதி இ. துரைராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்), செல்வி இலக்குமி பெரியதம்பி (யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (அ-90)

## ஆசிரியர் பிரச்சினை

நெடுந்தீவு, ஆக. 18

இரண்டு வருடச் சம்பளக் கடன் தொடர்பாக நெடுந்தீவில் கடமையாற்றும் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டனர் என்று கூறப்படுகிறது.

முதல் சுற்றில் வழங்கப்படும் கடன் வேலணை கோட்டக் கல்விப் பகுதியைச் சேர்ந்த சுமார் 25 ஆசிரியர்களுக்குக் கிடைக்கலாம் எனத் தெரிகின்றது.

தெரிவான வேலணை கோட்டக் கல்விப்பகுதி ஆசிரியர்களில் நெடுந்தீவில் பணியாற்றும் ஆசிரியர்கள் எவரும் இல்லை என்று கூறப்படுகின்றது. (இ- 111)

தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...



கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷப்ரூவை நாடுங்கள்:

ஷப்ரூ
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



● சின்னத்துரை தியாகராசா ●
(திருகோணமலை, கண்ணன் காட்டுவயர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

மலர்வு: 01- 09- 1942
உதிர்வு: 20- 07- 1989

சென்ற 20-7-89 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிரியை 19- 08- 1989 சனிக்கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இதில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மேலும் பலவகைகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும் ஆறுதல் கூறியோருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

—குடும்பத்தினர்

செட்டி தோட்டம்,
குருநாதர் கோவிலடி,
பொலிகண்டி.
(1627)

REMEMBERING A DEVOTED HUSBAND AND A NOBLE FATHER ON HIS

"MEMORIES NEVER DIE"



**James. A. J. Arumainathan**
(Teacher — St. Patrick's College)

**Called Home:** 18. 08. 1988

Memories has A magic way,
Of keeping loved ones near,
Ever close in mind and Heart,
Are the ones we hold most Dear.

Lovingly & Prayerfully
Remembered Everyday by

**Wife, Sons, Mother and Family Members.**

831, Hospital Road,
JAFFNA.
(1608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுதுளைக்காத அறையை பாவிக்க மறுத்த ராஜீவ்

புதுடில்லி, ஆக 17

பிரதமர் ராஜீவ் காந்தி குண்டு துளைக்காத கவச அறைக்குள் இருநதே சுதந்திர தின உரையை புதுடில்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து நிகழ்த்துவதே வழக்கமாக இருந்து வந்தது.

ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர்காந்தி அந்த பாதுகாப்பை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார்.

குண்டு துளைக்காத அறை கடைசி நிமிடத்தில் பாதுகாப்பு அதிகாரிகளால் அகற்றப்பட்டது.

இதனால் சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளச் சென்றவர்கள், மேடைக்கு அருகே சென்றவர்கள் எல்லாம் பாதுகாப்புப் படையினரால் தீவிர சோதனைக்குட்படுத்தப் பட்டனர்.



அணி வகுப்பு இடம்பெற்ற பகுதிகளில் உள்ள உயரமான கட்டடங்களின் உச்சிகளில் பாதுகாப்புப்படையினர் நிலை கொண்டு இருந்தனர்.

செங்கோட்டை மீதாக பறக்கும் உத்தரவு பெருக விமானங்களைச் சுட்டு வீழ்த்தவும் பாதுகாப்புப்படையினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. (எ)

## ஜெயலலிதாவின் பெயரில் நடந்த மோசடிச் சம்பவம்

சென்னை, ஆக. 15

செல்வி ஜெயலலிதாவின் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றுக்குச் சென்றவர்கள் ஏமாற்றம் அடைந்து திரும்பினர்.

கடந்த சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு போயஸ் கார்டன் வாசஸ்தலத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை செல்வி ஜெயலலிதா நடத்துவார் என்று தொலைபேசி மூலம் பத்திரிகை நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

விழுந்தடித்துக் கொண்டு செய்தியாளர்களும் புகைப்படப் பிடிப்பாளர்களும் போயஸ் கார்டன் சென்றனர்.

அங்கு ஜெயலலிதா இல்லை. அவர் புதிய திரைப்படம் ஒன்றின் அங்குரார்ப்பண விழாவுக்கு சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்படியானால் செய்தியாளர் மாநாடு... அப்படி ஒன்றையும் செல்வி ஜெயலலிதா ஒழுங்கு செய்யவில்லையே என்று கூறப்பட்டது.

அப்போதுதான் செய்தியாளர்களுக்கு ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று தெரியவந்தது.

வீடு திரும்பிய ஜெயலலிதா பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

பத்திரிகைகள் மத்தியில் எனது பெயருக்கு அவமானத்தை ஏற்படுத்த சில விஷமிகள் செய்த முயற்சி இது.

இப்படியான அழைப்பு தொலைபேசியில் வந்தால் பத்திரிகை நிறுவனங்கள் முதலில் சரியா என்று பார்த்துக் கொள்ளவேண்டும்.

இப்படி ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறியிருந்தார். (எ)

● ஆசியன் அமைப்பைச் சேர்ந்த

# சிங்கப்பூரில் அமெரிக்காவின் ராணுவத்தளம்; சோவியத் யூனியன் அரசின் கடும் எதிர்ப்பு!

மாஸ்கோ, ஆக. 17

சிங்கப்பூரில் இராணுவத் தளங்கள் அமைக்கும் அமெரிக்காவின் முடிவை சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

தெற்காசிய நாடுகளின் ஸ்திர நிலையை அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் மிக மோசமாகப் பாதிக்கும் என்று சோவியத் யூனியன் எச்சரித்துள்ளது.

சோவியத் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் யூரி கிரெமிற்ஸ்கிச் செய்தியாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

### சோவியத் கவலை; கண்டனம்

அமெரிக்க ராணுவதளங்களை நிறுவ இடமளிக்கப் போவதாக சிங்கப்பூர் அரசு அறிவித்திருப்பது குறித்து சோவியத் அரசு கவலை தெரிவித்து உள்ளது.

''தெற்காசிய நாடுகளின் இராணுவ- அரசியல் நிலையை அமெரிக்காவின் முடிவு பெருமளவில் மாற்றி அமைத்து விடும்.

### சிங்கப்பூரின் மீது நிர்ப்பந்தம்

ஆசிய, பசுபிக பிராந்தியங்களில் அதிகார அரசியலைத் தொடர்வதில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. அதன் ஒரு கட்டமாகவே சிங்கப்பூரின் மீது அமெரிக்கா தற்போது நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்து உள்ளது.

உலகில் எந்த நாடுகளிலும் தளங்கள் அமைப்பதை சோவியத் யூனியன் திட்டவட்டமாக எதிர்த்தே வந்திருக்கிறது.''

இப்படி சோவியத் அரசின் பேச்சாளர் சொன்னார்.

பிலிப்பீன்ஸில் உள்ள தனது தளங்களை மூடப்போவதாக அமெரிக்கா அறிவித்ததற்கு பதில் நடவடிக்கையாக வியட்னாமில் உள்ள இரண்டு தளங்களை மூடப்போவதாக சோவியத் அறிவித்திருந்தது.

### மலேசியாவும் எதிர்ப்பு

சிங்கப்பூரில் அமெரிக்கா நிரந்தரத்தளம் அமைப்பதை மலேசியா அரசு எதிர்த்துள்ளது இதேவேளை—

சிங்கப்பூரில் உள்ள வசதிகளை அமெரிக்கா பயன்படுத்தலாம்; ஆனால் நிரந்தரத் தளங்களை அமைக்க அமெரிக்கா முயற்சிக்கக் கூடாது என்று மலேசியப் பிரதமர் முகமது மஹதீர் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் அமெரிக்கத் தளம் அமைவது இப்பிராந்தியத்தில் ஆயுதப் போட்டியை அதிகரிக்கச்செய்யும் என்றும் அவர் செலாங்கூன் மாநிலத்தில் பாங்கி என்ற இடத்தில்நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

### ஆசியன் அமைப்பு கூடும்

ஆசியன் அமைப்பில் உள்ள உறுப்பு நாடான சிங்கப்பூரில் அமெரிக்கத் தளம் அமைவது ஆசியன் அமைப்பின் சமாதான, சுதந்திர, நடுநிலைப் பிராந்தியக் கொள்கைக்கு முரணானது என்று மலேசிய வெளியுறவு அமைச்சர் அபு ஹஸன் ஓமர் தெரிவித்தார்.

இப்பிரச்சினையைஆராய ஆசிய அமைப்பு நாடுகள் மாநாட்டைக் கூட்ட மலேசியா நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## தெற்காசிய ஸ்திரநிலைக்கு பாதிப்புஎன்று கண்டனம்

● சீனாவில்

## 200 பேருக்கு மரண தண்டனை ஒரு லட்சம்பேர் காவலில்

கடந்த ஜூன் மாதம் 3ஆம் மாணவர் எழுச்சியை சீன இராணுவம் அடக்கிய பின்னர் இதுவரை 200க்கு அதிகமானோரை விசாரணை இன்றி சீன அரசு தூக்கிலிட்டிருக்கிறது என்று சீன மாணவத் தலைவர் திரு. லீலூ தெரிவித்தார்.

சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## பிரி. - ஆர்ஜென்ரீனு உறவு சீராக்கும் பேச்சு ஆரம்பம்

நியூயோர்க், ஆக 17

ஏழு ஆண்டு கால இடைவெளியின் பின்னர் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவது பற்றி பிரிட்டனும் ஆர்ஜென்ரீனுவும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

1982 இல் போக்லந்து தொடர்பாக இடம்பெற்ற யுத்தத்தைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான இராஜ தந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஆர்ஜென்ரீனுவுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டதடையைப் பிரிட்டன் நீக்கியது.

கடந்த மாதம் தான் ஆர்ஜென்ரீனு பிரிட்டனுடனான தனது வர்த்தகத் தொடர்பை மீண்டும் ஆரம்பித்தது.

நேற்று நியூயோர்க்கில் பிரிட்டிஷ் தூதர், ஆர்ஜென்ரீனுவின் சிறப்புத் தூதர் ஆகியோர் பேச்சுக்களை ஆரம்பித்தனர். (எ)

● சோவியத் யூனியன்

## அஸர்பைஜானில் பேரணிகள்; இன மோதல் தீவிரமடைகிறது!

பாகு, ஆக. 17

சோவியத் யூனியனில் உள்ள நாகொர்ணு கரபா பிரதேசத்தில் மேலும் இனமோதல்கள் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசம் தற்சமயம் சோவியத் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அஸர்பைஜான் மாநிலத்தின் நிர்வாகத்தில் இருந்த இப்பிரதேசத்தை ஆர்மேனியாவுடன் சேர்க்கும்படி கோரி கடந்த ஆண்டு இன மோதலகள் ஏற்பட்டன.

அஸர்பைஜான் தலைநகர் பாகுவில் நேற்று முன்தினம் ஒன்றரை லட்சம் மக்கள் வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். (எ)

## காபூல் நிலைமை 5 பேர் பலி

காபூல், ஆக. 17

ஆப்கன் தலைநகர் காபூல் மீது கெரில்லாக்கள் நேற்றும் நடத்திய ரொக்கட் தாக்குதலில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 22 பேர் காயமடைந்தனர். (எ)

## சங்கீத விழா

சென்னை மியூசிக் அக்கடமியின் 66 ஆவது சங்கீத விழாவின் தலைவராக பிரபல கர்நாடக சங்கீத வித்துவான் மகாராஜபுரம் சந்தானம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இவ்விழா வருகிற டிசம்பர் மாதத்தில் நடைபெறும். (எ)

## போலந்து பிரதமர் பதவி வல்சேவால் நிராகரிப்பு

போலந்து பிரதமர் செஸ்லோ கிஸ்ஹாக் இராஜினமா செய்து விட்டார்.

புதிய அரசு ஒன்றை அமைக்கும்படி விவசாயிகள் கட்சித் தலைவர் ரோமன் மலினோவஸ்கி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கிஸ்ஹாக் அமைக்கும் எந்த அரசாங்கத்தையும் தான் ஆதரிக்கப் போவது இல்லை என்று சொலிடாரிட்டிக் கட்சித் தலைவர் வால்சே தெரிவித்ததை தொடர்ந்து பிரதமர் தனது பதவியை ராஜினமாச் செய்தார்.

இதனிடையில் பிரதமராக பதவி ஏற்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை திரு. வால்சே நிராகரித்து விட்டார்

பிரதமர் பதவிக்கு என்னிலும் பார்க்க திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு நான் ஆதரவளிப்பேன். கம்யூனிஸ்ட் அல்லாத அரசு அமைய வேண்டும்.' — இப்படி திரு. வால்சே தெரிவித்தார். (எ)

## அமைதியை நோக்கி லெபனன் ஐ. நா.முடிவுக்கு செவி சாய்ப்பு

பேரூட், ஆக 18

லெபனன் தலைநகர் பேரூட்டில் அமைதி நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் அனுட்டிக்கும் படி ஐ. நா. பாதுகாப்புச் சபை விடுத்த வேண்டுகோளுக்கு கிறிஸ்தவ படைகளும சிறிய ஆதரவு ஷியா படைகளும் செவிசாய்த்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில்—

லெபனனில் கோஷ்டி சண்டைகளால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது பூரணமாக நிறுத்தப்பட வேண்டும்என்று மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (எ)

## 'போடோ' இன போராட்டம்

புதுடில்லி, ஆக; 17

அஸாமில் தனிநாடு வழங்கப்படா விட்டால் 'செய் அல்லது செத்துமடி' போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக போடோ இன மாணவர் அமைப்பும் போடோ இன மக்கள் கமிட்டியும் மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுத்து உள்ளன. (எ)

# 'செவ்வாய்' சென்ற போபோஸ் விண்கலங்கள் அண்ட வெளியில் தொடர்பு இழந்த மர்மம்!

சோவியத் ரஷ்யா கடந்த ஆண்டு ஜூலையில் 7ஆம்12ஆம் தேதிகளில் அடுத்தடுத்ததாக இரண்டு ஃபோபோஸ் (Phobos) விண்ணூர்திகளை செவ்வாய்க்கோள் மற்றும் அதைச் சுற்றுகிற 'ஃபோபோஸ்' எனும் துணைக்கோளையும் அணுகி ஆராய்வதற்கென அனுப்பி வைத்தது பழைய செய்தி.

### விசேட ஆய்வு

லேசர் கதிர் கரத்தினுல் ஃபோபோஷ் துணைக்கோளின் நிலப்பரப்பில் படிந்திருக்கும் தனிமங்களைக் கிளறிவிட்டு சோதித்திட (Lima D) மற்றும் 'டியான்' (Dion) போன்ற விசேஷப் பரிசோதனைகள் நடத்தத் திட்டமிட்டிருந்தது ரஷ்யா.

தவிர 'நெடுங்காலத் தானிறங்கி' (Long-term Automated Lander) எனும் ஊர்தியினை அதன் தரையில் இறக்குவதன்மூலம் இதில் பொருத்தப்பட்டுள்ள எக்ஸ் - கதிர் மினுச நிறமாலை அளவி X-ray FluorescenceS pctrometer)யின் உதவியினுல் நிலஆனங்களைக் குடைந்து மண் பரிசோதனை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன்மூலம் செவ்வாயிலோ அதன் துணைக்கோளிலோ உயிரின் அறிகுறிகள் தெனபடுகின்றனவா அல்லது அவை வாழ்வியல்வசதிப்படுமா, வித்தியாசமான கனிவளங்கள் உண்டா என்பன போன்ற நில ஆராய்ச்சிகளுக்கு வழிகோலும் முயற்சி அது.

### தவறுன கட்டளை

ஃபோபோஸ்-1, ஃபோபோஸ்2ஆகிய இரண்டு விண்ணூர்திகளுமே ஆரம்பக் கட்டத்தில் செவ்வய் நோக்கி ஆரோக்கியப் பயணம் மேற்கொண்டிருந்தன.

எனினும் செப்டம்பர் 2ஆம் நாளில் திடீரென்று முலாவது விண்கலத்திலிருந்துவரும் சமிக்ஞைகள் நின்றுவிட்டன; தகவல் தொடர்பு முற்றிலுமாக அறுந்துபோனது.

தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தில் பணியாளர் பிறப்பித்த ஒரு 'தவறுன கட்டளை' incorrect command) தான் இத்தொடர்பு இழப்புக்குக் காரணமாம். இதனை ஓர் விபரீதமான தவறு என்று சுட்டுகின்றுர்!

மாஸ்கோவிலுள்ள விண்வெளி ஆய்வுப் பயிலகத்தின் (Institute of Space Research) தலைவரான ரொஆல்ட் சகாதயெவ் (RoaldSagedeyev) எனும் அறிஞர்.

டிசம்பர் மாதவாக்கில் ஃபோபோஸ் 2ன் உபகரணங்களிலும் வெவ்வேறு கோளாறுகள் (malfunctions) எழுந்தனவாம். எனினும் அவற்றில் தற்காலிகமாக பெரும்பாலானவை நிவர்த்தி செய்யப்பட்டன.

ஜனவரி 29 - 1989 அன்று கிரீன்விச் தலநேரப்படி மதியம் 12.55க்கு ஃபோபோஸ்-2 விண்ணூர்தியிலிருந்து செவ்வாய் சுற்றிவர ஊடுருவிக்கலம் (Probe) ஒன்று விடுவிக்கப்பட்டது.

செவ்வாயின் நிலநடுக்கோட்டிற்கு 1 பாகை சாய்வாக 79,750 கிலோ மீற்றர் கோளுக்கு அப்பாலும், 850 கிலோ மீற்றர் கோளருகிலுமாக 76½ மணிக்கு ஒரு சுற்று வீதம் இயங்கிற்று அக்கலம்.

முதல்தடவையாக பிப்ரவரி 1 - 1989 அன்று செவ்வாய்ப் பரப்பிலிருந்து 864 கிலோ மீற்றர் அண்மையில் பறந்து சென்றதை ஐரோப்பிய விண்வெளிமுமை(European Space Agency) யும் உறுதிப்படுத்தியது.

தொடர்ந்து பெப்ரவரி 27இல் வியாழன் கிரகத்தினைக் குறிப்பு வைத்து இக்கலத்தின் தொலைக்காட்சிக் கருவி ஒழுங்கு படுத்தப்பட்டது.

விண்வெளியில் சூரியனையும், 'அகத்தியர்' எனறழைக்கப் பெறும் பிரகாசமான கனோபஸ் (Canopus) விண்மீனையும் அடையாளம் வைத்து உறுதிசை சரிசெய்யப்பட்ட இந்த ஊடுருவிக்கலம் மார்ச் 14ஆம் நாள் ஃபோபோஸ் செயற்கைக்கோளை 100 கிலோ மீற்றர் இடைவெளியில் மிக நெருங்கிவிட்டிருந்தது.

எதிர்பார்ப்புகளுடன் ஏப்ரல் 9 அல்லது 10ஆம் திகதி இக்கலத்தினை ஃபோபோஸ் தரையில் தத்திச் செல்லுமாறு பணிக்கத் திட்டமிட்டிருந்தனர். கண்ணுக்கெட்டியது கைக்கெட்டும் தருணத்தில் மார்ச் 27ஆம் நாள் ஃபோபோஸ் விண்ணூர்தி தொடர்பற்றுப் போனது.

### கதிர்வீச்சு வளையம்

பூமியினைச் சூழ்ந்த வானவெளியில் கதிர்வீச்சு வளையங்கள் (Radiation belts) நிலை பெறுவதைப் போன்ற செவ்வாய்க்கும் கதிர்வீச்சு வளையங்கள் அரண் அமைத்துள்ளதை ஃபோபோஸ் விண்கலம்தான் முதன்முதலில் கண்டு துலக்கியுள்ளது.

எனினும் இந்த இரு விண்ணூர்திகளின் செயல்பாடு முழுமையும் பலனளிக்காத போதிலும் மனம் தளராத சோவியத் விஞ்ஞானிகள், 1994ஆம் ஆண்டின் அடுத்த செவ்வாய்ப் பயண விண்கலத் திட்டத்தை முன்னறிவித்து விட்டனர்.

சென்ற ஆண்டில் ஃபோபோஸ் -2 ரஷ்யாவின் பைக்கானூர் ஏவுதளத்தினின்று செலுத்தப்பட்டதை நேரில் பார்வையிட்ட 'அமெரிக்க விஞ்ஞானியர் பேரவை' (Federation of American Scientists) உறுப்பினரான ஜான் பைக் (John Pike) என்பவர் ரஷ்யர்கள் தம் விண்கலத்தின் மொத்த எடையைக் குறைத்து லாபம் பார்த்ததில் ஒரு முட்டாள்தனமான கணிப்பொறியினை அதில் பொருத்தி விட்டிருந்தார்களோ என்னவோ என வருத்தம் தெரிவித்துள்ளார்.




சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

பெற்றேர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்ய விரும்புகிறீர்களா?
அவர்களின் அறிவுப் பசிக்கு பல்சுவை விருந்து அளிக்க விருப்புகிறீர்களா?

உடனே

'அர்ச்சுனு' வை வாங்கி

மாதந் தோறும்

பரிசாக வழங்கவும்

விலை ரூபா 4/- மட்டுமே.

ஆண்டுச் சந்தா ரூபா 55/- (தபால் செலவு உட்பட)

காசோலை / காசுக்கட்டளை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி த. பெ. எண் 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரில்

அண்ணா கோப்பி, மல்லித்தூள்,
மல்லிக் கோப்பி, மாவகைகள்,
ஜீவாகாரம், மிளகாய்த்தூள்
ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்
கொள்ளலாம்:

அண்ணா கோப்பி,
விளம்பர நிலையம்.
(கோயில் முன்வாசல் அருகாமை, நல்லூர்.)

# உதயன்

18 08 1989 வெள்ளிக்கிழமை

அண்ணா கோப்பியின்

வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து
கீழ்க்காணும் பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
100g வெற்றுப் பைக்கட்டுக்கள் 10க்கு
அல்லது
50g வெற்றுப் பைக்கட்டுக்கள் 20க்கு
அல்லது
25g வெற்றுப் பைக்கட்டுக்கள் 40க்கு
ஒரு எவர்சில்வர் ரம்ளர்
பரிசுப் பொருட்களை நல்லூரில் உள்ள
அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில்
பெற்றுக் கொள்ளலாம்:

## வடமராட்சி கிழக்கில் இரு தினங்கள் தேடுதல்

தாளையடி ஆகஸ்ட் 18

வடமராட்சி கிழக்குப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு இரு தினங்கள் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையான ஜவான்கள் பல்வேறு இடங்களிலிருந்து அப்பகுதிக்கு தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் கொண்டு வரப்பட்டனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை ஆகிய இடங்களில் தேடுதல் நடத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை உடுத்துறை, மருதங்கேணி, மண்டலாய் ஆகிய இடங்களில் தேடுதல் இடம் பெற்றது.

தேடுதலின்போது சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப் பட்டதாகவும் தெரியவருகின்றது. (ஒ-144)

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் ரூ.4,000 நிவாரணம் இன்று

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 18

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 282 பேருக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடைப்பணம் 4 ஆயிரம் ரூபா இன்று ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்படவுள்ளது.

காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவையாளர் பிரிவுகளும் நிவாரணம் பெறவிருப்போரின் எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ அரியாலை மேற்கு -49
- ★ திருநெல்வேலி மேற்கு -21
- ★ கோண்டாவில் கிழக்கு -102
- ★ கொக்குவில் கிழக்கு -55
- ★ கொக்குவில் மத்தி -55

(ஒ-10)

## ஸ்ரான்லிவீதி வங்கியில்இன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக 18

இலங்கை வங்கியின் யாழ் ஸ்ரான்லிவீதிக்கிளையில்இன்று வெள்ளிக்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

வண்ணார்பண்ணை வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 413 குடும்பங்களுக்கும், கோண்டாவில் கிழக்கு கி. சே. பிரிவைச் சேர்ந்த 544 குடும்பங்களுக்கும் நிவாரணப் பணம் வழங்கப்படும். (ஒ-10)

## புளொட் உறுப்பினர்களை விடுவிக்கக் கோரிக்கை

வவுனியா, ஆக 18

மாலைதீவில் தண்டனைக்குள்ளாக்கப்பட்ட புளொட் உறுப்பினர்களை மனிதாபிமான முறையில் விடுதலை செய்யுமாறு அந்த அரசிடம் புளொட் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வன்னிப் பிராந்திய புளொட் இயக்கத்தின் இராணுவப் பிரிவு பொறுப்பாளர் திரு. கே. ஆர். எஸ். சந்திரன் அறிக்கையொன்றின் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆண்டு நவம்பரில் மாலைதீவு நாட்டில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தின் போது அரச படைகளினால் கைதுசெய்யப்பட்டு இதுவரை காலமும் சிறைத்தண்டனை அனுபவித்ததே எமது தோழர்களுக்குப் போதுமான தண்டனையாகும்.

இந்த அணுகுமுறையின் அடிப்படையில் மாலைதீவு ஜனாதிபதி எமது அனைத்து தோழர்களையும் கருணை கூர்ந்து விடுதலை செய்ய வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

### ரயில்வே . . .

முடித்தனர்.

இனிமேல் அந்த வீதியால் செல்லும் வாகனங்கள் சேதமடையமாட்டா. அடுத்த வாகனம் போகும்வரை காத்திருந்து பயணம்செய்ய வேண்டியதும் இல்லை.

இந்த ஒரு நாள் - சில மணி நேர - வேலைக்காக நான் இல்லை, நீ இல்லை என்று இழுபறிப்பட்டார்களே அதிகாரிகள்!

அவர்களைத் தட்டி எழுப்பவும், விழிக்கச் செய்யவும் உதயன் உதவினான் என்பதில் ஒரு நிம்மதி. (அ-10)

### தவறவிட்ட பணம்

எமது ஸ்தாபனத்திற்கு வந்த வாடிக்கையாளரினால் குறிப்பிடப்பட்ட தொகைப் பணம் தவறவிடப்பட்டு உள்ளது: உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

ராதிகா ஜுவல்லறி,
இல. 222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(1640)

★ அன்றலர்ந்த மலர் வளையங்கள்
★ கடதாசி மலர்வளையங்கள்
ஓடர்களுக்கு
★ ரோஜாப்பூ மலர் வளையங்கள்
என்பன செய்வதில் கைதேர்ந்தவர்கள்

பிறைற் ஹவுஸ்,
(யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/3508]

### பிரேமாவின்--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் இச்செய்தி வெளியான நேரத்திலேயே பிரட்மன் வீரக்கோன் புதுடில்லி பயணமாகிவிட்டார். அவரது பயணம் இரு தரப்பினராலும் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

புதுடில்லியில் இரண்டு நாட்கள் பேச்சுக்கள் நடத்திய பிரட்மன் வீரக்கோன் நேற்றிரவு அங்கிருந்து கொழும்பு புறப்பட்டார்.

கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் வீரக்கோன், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

கொழும்பு திரும்பியவுடன் தூதுவர் வீரக்கோன் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து தமது புதுடில்லி விஜயத்தின் போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து அவருக்கு விளக்கமளிப்பார்.

அதன் பின்னர், இந்த விடயத்தில் ஏற்புடைய அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### மன்னாரில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் தொடுக்கவில்லை என்று புதுடில்லி அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை மன்னார் பகுதியில் அமைதிப் படையினர் நேற்று ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தனர் என்றும்- பெரிய அளவில் தேடுதல் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டனர் என்றும் பி. பி. ஸி அறிவித்தது. (உ-ஒ-எ

### சிமெந்து .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

மின்சாரம் கிடைத்த இரண்டொரு நாட்களில் உற்பத்தியைத் தொடங்கக்கூடிய நிலையில் கிளிங்கர் மற்றும் மூலப் பொருட்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் அதேவட்டாரங்கள் கூறின.

மின்சாரவிநியோகம்இல்லாதிருந்தபோதிலும், நாளாந்தம் 5,500 ரூபா செலவிட்டு, ஜெனரேட்டர் மின்சாரம் மூலம் கையிருப்பில் இருந்த சிமெந்து பைக்கட் செய்யப்பட்டதாகவும் —

நாளாந்தம் 75 லொறிகளுக்கு (கியூவில் நிற்கும் 25 லொறிகள் உட்பட) சிமெந்து விநியோகிக்கப்பட்டதாகவும், விண்ணப்பித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தட்டுப்பாடு எதுவுமின்றி சிமெந்து விநியோகிக்கப்பட்டதாகவும் — அதே வட்டாரங்கள் மேலும் தகவல் தந்தன.

யாழ்ப்பாணத்தில்இதுவரையில் ஏற்பட்ட சிமெந்துத்தட்டுப்பாடு செயற்கையாக உண்டாக்கப்பட்டதாகவும்வழமையான காலத்தில் கூட்டுத்தாபனத்தில் நாளாந்தம் சுமார் 60 லொறிகளுக்கே சிமெந்து விநியோகிக்கப்பட்டதாகவும்' மின்சாரம் இல்லாத கடந்த ஒருமாதத்தில் நாளாந்தம் 75 லொறிகளுக்குச் சிமெந்து விநியோகிக்கப்பட்டதாகவும் — அந்த வட்டாரங்கள் விவரித்தன. (அ

### நெல்லியடி--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதிப் பகுதியில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

அதை அடுத்து ஷெல் தாக்குதல்களும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டன.

இதனால் வதிரி, மாலுசந்தியில் பதற்றம் நிலவியது.

அதே சமயம் நெல்லியடி— யாழ்ப்பாணம் வீதியில் நாவலர் மடத்தடியிலும் மோதல் சம்பவம் ஒன்று நடைபெற்றது.

சம்பவத்தை அடுத்து ஷெல் வீசுக்கள் நடத்தப்பட்டன. இதனால் அப்பகுதி வெறிச்சோடியது. (ஓ-7)

## 25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர்: நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர் பட்டியல்

### நாளை பார்வைக்கு வைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 18

25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர் நியமனத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோரின் பெயர்கள் அடங்கிய பட்டியல்கள் சில நேற்று அந்தந்தப் பகுதி கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பருத்தித்துறை கிழக்கு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கான பெயர்ப் பட்டியல்களே நேற்று அனுப்பி வைக்கப்பட்டவை ஆகும்.

ஏனைய பகுதிகளுக்கான பெயர்ப் பட்டியல்களைத் தயாரிக்கும் வேலைகள் நேற்று இரவும் தொடர்ந்து யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றன.

பட்டியல்கள் அனைத்தும் இன்று சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுவிடும் என்றும், நாளை முதல் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிரவரும் 20 ஆம் திகதி முதல் நடைபெற உள்ளன. (இ-9)

## மட்டக்களப்பில் நேர்முகப் பரீட்சைகள் நேற்றுக் குழப்பப்பட்டன

மட்டக்களப்பு, ஆக. 18

25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று மட்டக்களப்பில் தொண்டர் ஆசிரியர்களால் குழப்பப்பட்டன.

நேற்றுக் காலை (வியாழன்) முதல் ஞாயிற்றுக்கிழமை வரை 11 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சைகள் நடைபெற இருந்தன.

இந்த நேர்முகப் பரீட்சை நிலையங்களுக்கு வாகனங்களில் குழுக்களாகத் தொண்டர் ஆசிரியர்கள் சென்றனர் என்றும் விண்ணப்பதாரிகளின் பட்டியல் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்கள் அனைத்தும் அவர்களால் பறித்தெடுக்கப்பட்டு எரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயிலுநர் ஆசிரியர் தெரிவில் தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு வயதெல்லை இருக்கக்கூடாது என்றும் தொண்டர் ஆசிரியர்கள் கோரி வந்தனர் என்பதும்—

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் இருந்து வந்தனர் என்பதும் தெரிந்தவையே. (ஒ-க-21)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா இராஜசிறீதரன் (சிறீ)

நடராசா இராஜசிறீதரன் (ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோஸ், ரி. வி. ரதி, ஸ்ரான்லி பேணிச்சர்ஸ் ஆகியவற்றின் பங்காளர்) 16-8-89 அன்று அகால மரணமானார். இவர் காலம்சென்ற நடராசா (ஸ்தாபகர், ரதி வோச் வேக்ஸ்) - கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், விஜேதன், அஜேபன், ஜெனி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜகுலசிங்கம், இராஜகுலேந்திரன், இராஜசேகரன், இராஜரதி (லண்டன்), இராஜரஜனி, இராஜசிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் சிவஞானம் (லண்டன்), பரமானந்தம் (கணக்காளர்), பேரின்பநாயகி, செல்வி சுசிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 18-8-89 (வெள்ளிக்கிழமை) இன்று பண்டத்தரிப்பு - சில்லாலை திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜசேகர்

பண்டத்தரிப்பு,
சில்லாலை.
(11734)

### செல்வன் சாள்ஸ் அரியதீபன்

காரைநகர் அல்லின் வீதியைச் சேர்ந்த பொ. அரியரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), திருமதி அரியமலர் அரியரத்தினம் (அதிபர், ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை), இவர்களின் அன்பு மகன் சாள்ஸ் அரியதீபன் ஜேர்மனியில் அகாலமரணமானார்.

இவர் Dr. அரியராணி (போதனா வைத்தியசாலை, பேராதனை), அரியவதனா (Bsc ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை), அரியரூபினி (Bsc) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணைரஞ்சன் (சவூதி அரேபியா) இவரின் அன்பு மைத்துனனும், ருகசிகாவின் அன்பு மாமனாருமாவார்.

இவருடைய அஞ்சலி ஆராதனை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு (19-8-1989) பெற்றோரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. அரியரத்தினம்.
(தகப்பன்)

அல்லின் வீதி,
காரைநகர்.
(1641)

## மரண அறிவித்தல்கள்

### திரு. இ. சிவரத்தினம்

யாழ்ப்பாணம் பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழக ஆளுனர் குழு உறுப்பினரும் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் தலைவரும், வட மாகாண புற்று நோய்ச் சங்க முன்னைநாள் பொருளாளருமான திரு. இ. சிவரத்தினம் (ஓய்வுபெற்ற அரச ஊழியர்) 16-08-1989 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. இளையதம்பி திருமதி இ. தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், புன்னாலைக் கட்டுவன் சிறுப்பர் அரியகுட்டி, நல்லம்மா ஆகியோரின் மருமகனும், செல்வி திகழ்மலர் (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செல்வன் ஸ்ரீகரன் (அமெரிக்கா), செல்விகள் சாந்தமலர் (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சந்திரமலர் (வெளிவாரிப் பட்டதாரி மாணவி), திருமலர் (யாழ்/அக்கடமி) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் பத்மநாதன் (திருமலை), விக்னராஜா (அமெரிக்கா), திருமதிகள் ச. சிவனேஸ்வரி, வி திலகவதி ஆகியோரின் அன்புத் தமையனும், மல்லாகம் திரு. சச்சிதானந்தன் (சாஹிராக் கல்லூரி, கொழும்பு), திரு. விமல்ராஜா (Pioneer Hotal, Trincomalee), திரு. அரியரட்ணம், செல்விகள் பாக்கியம், சோமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

சமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி

''தங்க வாசா''
கல்வளை ஆலங்குளாய் றோட்,
சண்டிலிப்பாய்.
(1545)

### திரு. திருவம்பலம் திருச்சிற்றம்பலம்

(Bank சீனியர்)

தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. திருவம்பலம் திருச்சிற்றம்பலம் (முன்னாள் ஓய்வுபெற்ற யாழ் - மேக்கன்ரைல் வங்கி இலிகிதரும், முன்னாள் சினிமாஸ் லிமிடெட் மேற்பார்வையாளரும்) காலமானார்.

இவர் நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (லிடோ சினிமா), நவரத்தினம் (ஆசிரியர், மயிலணி சைவமகாவித்தியாலயம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), காலஞ்சென்ற சிவரத்தினம், திருமதி செ. தங்கராணி, யோகரத்தினம் (யோகா போட்டோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பா. கமலாம்பிகை (ஆசிரியை, சரவணபவானந்தா வித்தியாலயம், கோப்பாய்), திருமதி ந. சிவகாமி (ஆசிரியை, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்), திரு. கு. செல்லையாபிள்ளை (தொழில் நுட்பவியலாளர், ஓமான்), திருமதி யோ. வத்சலா (ஆசிரியை, சிறுவர் கல்வி நிலையம், அம்பனை, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயபிரதா, திருமாறன், திவ்வியராஜ், ருமேஷ்குமார், தக்ஷாயினி, கங்காசுதன் ஆகியோரின் அன்புப் பாட்டனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-08-1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைமன் கலட்டி,
ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பளை.

தகவல்:
திரு. தி. பாலச்சந்திரன்
(1633)

### திரு. பொன்னையா நடராசா

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த திரு. பொன்னையா நடராசா 17-8-89இல் காலமானார். இவர் இளைப்பாறிய நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரும், முன்னாள் நெடுந்தீவு கிராமசபை உப தலைவரும், நெழுவினிப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும், இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலாம்பாள், திருநாவுக்கரசு (சவூதி அரேபியா), குணசிங்கம் (முன்னாள் முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம்), இராஜராஜேஸ்வரி (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), கணேசகுமார் (தொழிற்கந்தோர், யாழ்ப்பாணம்), இராசேந்திரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், திரு. வைத்திலிங்கம் - காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சிவராஜா (இலங்கை வங்கி, மாவட்டக் காரியாலயம், முல்லைத்தீவு), இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி, புண்ணியமூர்த்தி (ஆசிரியர்), கமலவேணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், குஞ்சாச்சிப்பிள்ளை, வீரசிங்கம், மார்க்கண்டு ஆகியோரின் சகோதரரும், தையல்முத்து, கணபதிப்பிள்ளை (கொட்டக்கலை), குமாரசுவாமி (ஓய்வூதியக் கிளை, கச்சேரி - யாழ்ப்பாணம்), முத்துப்பிள்ளை, சுவாமிநாதன் (தொழிலதிபர், மன்னார்), கனகசபை (வர்த்தக முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், நெடுந்தீவு), வ. ஐ. அம்பலவாணர் (மன்னார் ஸ்டோர்ஸ்), நாகம்மா, தையல்நாயகி ஆகியோரின் மைத்துனரும், குமாரசாமி (ஆசிரியர்), தருமலிங்கம் (ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு) ஆகியோரின் சகலனும், துஷ்யந்தன், குலோத்துங்கன், பூர்ணிமா, ஜனகன், சஞ்சீவன், கௌசிகன், சாம்பவி, பிரசாத், பிரகாஷ், நிஷாந்தன், மயூரன், ஜானகி, சிந்துஜா, சோபிஜா ஆகியோரின் அருமைப் பாட்டனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. குணசிங்கம்

63/2, மலர்மகள் வீதி,
யாழ்ப்பாணம்.
(11735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 223/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 08 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.